# திருக்கோயில்




ஜூலை 2003

விலை ரூ7.00

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

சென்னை - 600 034.









# 1008 இலவசத் திருமண விழா

## அழைப்பிதழ்

நாள் : 18.6.2003 புதன் கிழமை

நேரம்: காலை 10.45 மணி முதல்
11.45 மணிக்குள்

இடம் :
அருள்மிகு தேவி கருமாரியம்மன்
திருக்கோயில் அருகில், திருவேற்காடு.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

| மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - ஆடி ஜூலை 2003 | மணி 7 |
|---|---|---|---|



சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

*சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்*

ஆசிரியர்

*முனைவர் த. அமிர்தலிங்கம்,*
*எம்.ஏ., பி.எச்.டி.*

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

**திருவேற்காடு அருள்மிகு**
**தேவி கருமாரி அம்மன்**

## பொருளடக்கம்


**திருவேற்காட்டில் 18-06-03 அன்று 1053 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் நடத்திவைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை**

**திருமந்திர உபதேசம் - 'திருமந்திரச் செம்மல்'**
*டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)*

**ஆன்மிகம்** - *திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)*

**திருஞானசம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை**
*- முனைவர் த. அமிர்தலிங்கம்*

**திருத்தணிகை** - *புலவர் செந்துறைமுத்து*

**காகபுஜண்டரிடம் கருடன் கேட்ட கேள்விகள்**
*- முனைவர் இரா. செல்வகணபதி*

**மாணிக்க வாசகரின் முற்பிறவி**
*- கலைமாமணி மா. இலட்சுமணன்*

**மாணிக்க வாசகர் மகிமை** - *டாக்டர் சிவப்பிரியா*

**கண்ணகியும் மாரியம்மனும்** - *டாக்டர் டி. செல்வராஜ்*

**அனுஷ்டானத் திருப்புகழ் - திருப்புகழ் மாமணி**
*மு. அருணகிரி*

**வருணனின் கருணையே வருக! வான்மழை இங்கே பொழிக!**
*- டாக்டர் த. அமிர்தலிங்கம்*



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி: *28334811, 28334812, 28334813*

# திருவேற்காட்டில் 18-06-03 அன்று 1,053 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை

வேதங்கள் போற்ற வேற்காட்டில் வீற்றிருந்து கருணை பொழியும் கருமாரியின் திருவருளால், திக்கெட்டும் வியக்கும் இந்தத் திருமண நிகழ்ச்சி இன்று இங்கு நடைபெறுகிறது. ஒன்றல்ல, இரண்டல்ல, நூறல்ல, ஓர் ஆயிரமும் அல்ல, ஆயிரத்து ஐம்பத்து மூன்று திருமணங்கள் அன்னையின் திருத்தலத்தில் இன்று அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கு நோக்கினும் மலர்ந்த முகங்கள்! மகிழ்ச்சி பொங்கும் விழிகள்! ஒரு திருமணம் என்றாலே தெருவே களை கட்டும். இங்கேயோ - 1,053 திருமணங்கள்! எங்கும் குதூகலம்! எங்கும் கோலாகலம்!

இந்த 1,053 திருமணங்களையும் ஒருசேர நடத்தி வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் திருவேற்காட்டிற்கு வந்து இன்று திருமணம் புரிந்து கொண்டு இல்வாழ்வைத் தொடங்க இருக்கும் மணமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் இனிய திருமண விழாவில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த 719 இணைகளுக்கும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 165 இணைகளுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 144 இணைகளுக்கும், பழங்குடி இனத்தைச் சார்ந்த 22 இணைகளுக்கும், இதர வகுப்பைச் சேர்ந்த 3 இணைகளுக்கும் இன்று திருமணம் நடந்தேறியுள்ளது.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இந்தத் திருமணங்களை தாய் மனதோடு எப்படி எப்படி எல்லாம் சிறப்பாக நடத்தலாம் என்று கவனத்துடன் திட்டமிட்டு சிறப்பாக இன்று நடத்தி இருக்கிறது.

கடந்த ஆண்டு, இரண்டு கிராம் தங்கத்தில் பொன் திருமாங்கல்யம் வழங்கப்பட்டது. இந்த முறை, அந்தத் தங்கத்தின் அளவு 4 கிராம் ஆக கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த திருமாங்கல்யத்துடன் சேர்த்து, மொத்தம் 18 சீதனப் பொருட்கள் புதுமணத் தம்பதிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் ஒரு திருமணத்திற்கு 4,500 ரூபாய் செலவழிக்கப்பட்டது. இந்த ஆண்டோ, அதனை மிஞ்சி ஒரு திருமணத்திற்கு, 5,500 ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

1,053 இல்லங்களில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இன்று திருவிளக்கு ஏற்றி வைத்து இருக்கிறது. இந்த விளக்குகள் ஆயிரம் ஆயிரம் காலம் ஒளி வீசித் திகழ வேண்டும் என்று இந்த தெய்வீகத் திருத்தலத்தில் நின்று வாழ்த்துகின்றேன்.

சாதி, மத பேதமற்ற ஓரிடத்தில் நடைபெற்ற சமத்துவத் திருமணம் இது! ஆண்டவன் முன் பேதமில்லை என்பதை உணர்த்த அனைத்து மணமக்களுக்கும் சமமான இடம் தந்துள்ள திருக்கோவில் திருமணம் இது!

''கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப்பார்'' என்பது பழமொழி, கல்யாணம் பண்ணிப் பார்ப்பது அவ்வளவு கஷ்டம் என்பதால் நமது முன்னோர்கள் அனுபவப்பூர்வமாக இந்தப் பழமொழியைச் சொல்லி வைத்தார்கள்.

வசதியற்ற நிலையில் திருமண வயதைத் தாண்டியும் திருமணம் செய்ய முடியாமல் ஏழை, எளிய பெண்கள் வாடிக் கொண்டிருக்கும் நிலைமையை எண்ணிப் பார்த்த நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இலவசத் திருமணத் திட்டத்தை 1982-ம் ஆண்டு கொண்டு வந்தார். தமிழ்நாடு அரசின், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் வசதி மிக்க திருக்கோவில்களில் சிறிய அளவில் இந்த இலவசத் திருமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆலயங்கள் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல் அறச்சாலைகளாகவும் விளங்க வேண்டும். அப்படித்தான் முன்பு நமது ஆலயங்கள் விளங்கின. ஏழைப் பெண்களுக்கு, இலவசத் திருமணம் நடத்துவதைக் காட்டிலும் உயரிய அறச்செயல் வேறு ஒன்றும் இல்லை. இதை உணர்ந்துதான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், கடந்த ஆண்டு இதே திருவேற்காட்டில், 1,008 திருமணங்களை, அரசின் சார்பில், இந்து சமய அறநிலையத் துறை மூலம் ஏற்பாடு செய்து, மிகச் சிறப்பாக நடத்தி வைத்தேன்.

அதைப் போலவே, இந்த ஆண்டும் 1,053 இலவசத் திருமணங்களை இன்றைக்குச் சீரோடும்,



சிறப்போடும் நடத்தி இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், 1,008 திருமணங்களை செய்விப்பது புதிய சாதனை அல்ல. இப்போது அரசின் சார்பில், இலவசத் திருமணங்கள் நடைபெறுகின்றன. எனது கடந்த ஆட்சிக் காலத்தில், அதாவது 1991 முதல் 1996 வரை, முதன் முறையாக நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதைவிட பெரிய அளவில், இலவசத் திருமணங்களை நடத்தி உள்ளோம்.

முதலில், சிதம்பரத்தில் ஒரே இடத்தில் 2,500 இலவசத் திருமணங்களை நடத்தினோம். அதற்குப் பிறகு, திருச்சி மாநகரத்தில் ஒரே பந்தலில் 5,004 இலவசத் திருமணங்களை நடத்தினோம்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இலவச திருமணத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அதை மாநிலமே வியக்கும் வண்ணம், மகத்தான அளவில் கழகத்தின் சார்பிலும், கழக அரசின் சார்பிலும், நடத்திக் காட்டிய பெருமையை உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கே காலம் வழங்கி இருக்கிறது. நல்லது செய்வதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும். எல்லோருக்கும் இந்தச் சிறப்பு அமைந்துவிடாது.

''தவமும் தவம் உடையார்க்கு ஆகும்'', என்பது தானே வள்ளுவரின் வாய்மொழி! நான் செய்து வரும் இப்படிப்பட்ட நல்லவற்றை மற்றவர்களும் செய்திருக்க முடியும். ஆனால், செய்யவில்லை. ஏனென்றால், இவற்றை எல்லாம் செய்வதற்கு ஆட்சிப் பொறுப்பும், மக்கள் அளித்த அதிகாரமும் மட்டும் போதாது - கூடவே இதயம் என்பதும் இருக்க வேண்டும்.

இந்த நேரத்தில், ஒரு வாழ்வியல் உண்மையை நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன். மகிழ்ச்சியை உருவாக்காத எவருக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்க உரிமையில்லை. ஏழைகளை மகிழ்ச்சிப்படுத்துங்கள். அதைப் போலப் பல மடங்கு மகிழ்ச்சி நீங்கள் தேடாமலேயே வந்து சேரும்.

இன்று, இல்லறத்தில் அடி எடுத்து வைக்கும் மணமக்கள் அனைவருக்கும் இதையே திருமண வாழ்த்துச் செய்தியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்க இணையற்ற முயற்சிகளை இடையறாது மேற்கொண்டு வரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அன்னதானத் திட்டம், ஆன்மிகக் கல்வி போன்ற பல்வேறு திட்டங்கள் மூலமாக ஓர் ஆன்மீகப் புரட்சியையே நடத்தி வருகின்றது.

இத்தகைய முற்போக்கு முயற்சிகள் தொடரும்! இந்தப் பொற்காலம் தொடரும்! என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 1,053 திருமணங்கள் இத்தனை சிறப்போடு நடந்தேற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த இந்த சமய அறநிலையத்துறை அமைச்சரையும், இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களையும் உடன் சேர்ந்து ஒத்துழைத்த அனைத்துத் துறை அலுவலர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

* * *

# திருமந்திர உபதேசம்

– திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

(''திருமந்திரச் செம்மல்'' திருமிகு டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் நம் தமிழக அரசின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய பெரும் சிறப்பு மிக்கவர்கள். தமிழக அரசின் தலைமைச் செயலராக அவர்கள் பணியாற்றிய பணிப்பொறுப்புமிக்க காலத்திலேயே திருமந்திரக் கட்டுரைகளைத் ''திருக்கோயில்'' இதழுக்கு வழங்குவதைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு திகழ்ந்தார்கள். அத்தகைய சான்றோர் நம் இதழுக்குத் ''திருமந்திர உபதேசம்'' தொடர் கட்டுரை வழங்க இசைந்துள்ளார்கள்.)

திருச்சிற்றம்பலம்

சைவ பெருமக்கள் போற்றி வணங்கும் 63 சிவனடியார்களில் திருமூலரும் ஒருவர்.

அவர் அருளிச் செய்த திருமந்திரமாலை எனும் ஒப்பற்ற நூல் 12 திருமுறைகளில் 10 ஆம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ளது.

சிவனடியார்கள் ஆகிய பேரருளாளர்கள் அருளிச் செய்துள்ள பதிகங்களும் பாடல்களும் இப் பன்னிரெண்டு திருமுறைகளில் காணப்படுகின்றன.

பன்னிரு திருமுறைகளும் சான்றோர்களால் சைவ சமயத்தின் தோத்திரப் பகுதி என்று புகழப் படுகின்றன.

இப்பன்னிரண்டு திருமுறைகளில் 12 ஆம் திருமுறையாக விளங்குவது சேக்கிழார் பெருமான் உலகுக்குத் தந்த ''திருத்தொண்டர் புராணம்'' ஆகும்.

63 நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாற்றினையும், அவர்களுடைய திருவாக்கினையும் கோர்வையாக அமைத்து ஒப்பற்றதொரு சமய இலக்கியத்தைச் சேக்கிழார் பெருமான் தமிழ்கூறு நல்லுலகிற்கு வழங்கியிருக்கின்றார்.

செயற்கரிய செய்த பெரியோர்களுடைய வாழ்வும் வாக்கும் சிவப்பரம்பொருளினுடைய பெருமையையும், மேன்மையையும் உலகிற்குப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள பாங்கினை ''திருத்தொண்டர் புராணம்'' தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது.

சேக்கிழார் பெருமான் இந்த 63 நாயன்மார்களுடைய வரலாற்றினை அவருடைய அரசனான அநபாயச் சோழ மன்னனுடைய அக இருளை நீக்குவதற்காகச் செய்ததாகக் கூறுகின்றார்.

அவர் அவ்வாறு வரலாற்றினைத் தொகுத்து எழுதுவதற்கு ஆதாரமாக இருந்த செய்திகளை எல்லாம் அவர் நம்பியாண்டார் நம்பிகளுடைய ''திருத்தொண்டர் திருவந்தாதி''யிலிருந்தும், சுந்தரர் பெருமான் அருளிச் செய்த ''திருத்தொண்டத் தொகை''யிலிருந்தும் எடுத்துக் கொள்கின்றார்.

தொகை நூலாக அமைந்திருப்பது சுந்தரர் பெருமானுடைய ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனத் தொடங்கும் திருத்தொண்டர் திருத்தொகை ஆகும். வன்தொண்டர் என்று இறைவனாலேயே புகழப்பட்ட சுந்தரர் பெருமான் திருவாரூர் திருநகர்த்தில் வாழ்ந்த காலத்தில், நாள்தோறும் தியாகேசப் பெருமானையும், வன்மீகரையும் வணங்கத் திருக்கோயிலுக்குச் செல்லுவதை வழக்கமாக் கொண்டிருந்தார்.

திருவாரூர் திருக்கோயிலில் தேவாசிரிய மண்டபம் என ஒன்று இருந்தது. இன்றும் அது இருக்கின்றது. சிவப் பரம்பொருளோடு ஒன்றியிருந்த சிவனடியார்கள் பலர் நாள்தோறும் இந்தத் தேவாசிரிய மண்டபத்தில் கூடினார்கள். இறைவனைத் துதித்தும், புகழ்ந்து பாடியும் தங்களுடைய பேரன்

பினையும் பேரானந்தத்தையும் தெரிவித்துக் கொள்ளும் தன்மையுடையவர்களாக இருந்தார்கள்.

அவர்களைக் கண்டுகளித்து வணங்கிட விண்ணுலகத்தைச் சார்ந்த தேவர்களும் அங்கே வருவார்கள். தேவர்கள் விரும்பும் மண்டபம் என்பதால் ''தேவாசிரிய மண்டபம்'' என்பது பெயராகும்.

ஒருநாள் சுந்தரர் பெருமான் தேவாசிரிய மண்டபத்தின் வழியாக இறைவன் சந்நிதிக்குச் செல்லுகின்றார். அவருடைய உள்ளத்திலே ''இந்த அடியார்களோடு இணைந்திருக்கும் நாள் என்று வருமோ?'' என்ற எண்ணம் தோன்றுகிறது. அவருடைய எண்ணத்தை இறைவன் அறிந்துகொண்டான்.

ஆனால் மலை நாட்டிலிருந்து வந்திருந்த சிறந்த சிவனடியாரான விறன்மிண்ட நாயனார் என்பவர் சுந்தரர் பெருமான் சிவனடியார்களை வணங்காமல் செல்லுவதை ஏற்றுக்கொள்ளவில்லை.

''சுந்தரரும் புறகு, அவரை ஆட்கொள்ளும் இறைவரும் 'புறகு'' என்று கூறினார். இறைவன் சுந்தரர் பெருமானுக்கு அருளாளர்களின் பெருமையைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

''பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைவாய்''

என்று அருளிச் செய்கின்றார் இறைவர்.

மேலும் சிவபெருமான் சிவனடியார்கள் மீது பதிகம் பாடச் சுந்தரர் பெருமானைப் பணிக்கின்றார். இந்தப் பெரும் அருளாளர்கள் எல்லோரையும் புனிதர் பேரவை உறுப்பினர்கள் என்று சேக்கிழார் பெருமான் நமக்கு அறிவிக்கின்றார். சிவப் பரம்பொருளோடு ஒன்றிப்போன எல்லா அடியார்களுமே இந்தப் புனிதர் பேரவையில் இருப்பவர்கள்.

சிவபெருமானைப் போற்றுவதும், வணங்குவதும் எல்லா வகைகளிலும் சிவனடியார்களை மகிழ்விப்பதும் என்ற ஒரே நெறியைத் தங்களுக்கு என்ன இடர் நேர்ந்தாலும் மேற்கொள்ளும் தன்மையாளர்கள் இவர்கள்.

63 நாயன்மார்களும் தங்கள் வாழ்வு, வாக்கு போன்றவைகளால் புனிதர் பேரவையின் குறிக்கோள்களையும் நெறிகளையும் சைவ உலகிற்குத் தெரிவித்துள்ளார்கள்.

இறைவனால் பாடும்படி பணிக்கப்பட்ட சுந்தரர் பெருமான் இத்தகைய பெருமை உடைய அருளாளர்களைப் பற்றி ''எவ்வாறு பாடுவது?'' என்று வினவ இறைவர்

''தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்''

என்ற அடியை எடுத்துக் கொடுத்து, சுந்தரரை மேலும் பாட வைக்கின்றார்.

திருவெண்ணெய் நல்லூரிலே ஆட்கொண்ட பெருமான் இவ்வாறே சுந்தரரைத் தமிழ்ப் பதிகம் பாடச் சொல்லும்போது தம்மை ''பித்தன்'' என்றே பாடுக என்று கூறுகின்றார்.

திருவாரூரில் ஒரு முழு அடியை எடுத்துக் கொடுத்துப் பாடச் சொல்லுகின்றார். அடியார்கள்பால் இறைவனுக்குள்ள அன்பினை எடுத்துக்காட்ட இந் நிகழ்ச்சிகளை விட வேறென்ன சான்றுகள் வேண்டும்?

''திருத்தொண்டத் தொகை''யில் சுந்தரர் பெருமான் இரண்டு அருளாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ''பிரான்'' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்.

திருஞான சம்பந்தப் பிள்ளையாரை ''எம்பிரான்'' என்றும், திருமூலரை ''நம்பிரான்'' என்றும் குறிப்பிடுகின்றார்.


''வம்பறா வரிவண்டு மணம்மாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''

''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்''

என்பன திருத்தொண்டத் தொகைத் தொடர்கள் ஆகும்.

எனவே 'பிரான்' என்ற பெயரைப் பெற்ற சிறப்பு திருமூலரைச் சாரும். நம்பிரான் என்ற சொல்லிலே உள்ள பொருளும் சிந்திக்கத் தக்கது.

சிவனடியார்களுக்கென மரபும், நெறியும் சிறப்பாக உண்டு. வாழையடி வாழையாகி சிவ பெருமானைச் சார்ந்த திருக்கூட்டத்தார் இம்மரபிலும் நெறியிலும் நின்று இருக்கின்றார்கள்.



தெய்வச் சேக்கிழார்

இம்மரபின் தலைவராக - எல்லோருக்கும் முன்னவராக - திருமூலர் இருந்தவர் என்ற செய்தியை ''நம்பிரான்'' என்ற சொல்லைப் பயன்படுத்திச் சுந்தரர் பெருமான் அவருக்குப் பெருமை சேர்க்கின்றார்.

''நம்பிரான் திருமூலர்'' அருளிச் செய்த திருமந்திர மணிமாலை பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

பன்னிரு திருமுறைகளும் சைவத்தின் தோத்திரப் பகுதிகளாகப் போற்றப்படுகின்றன. எனவே திருமந்திர மணிமாலையையும் ஒரு தோத்திர நூலாகக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் வள்ளலார் பெருமான் சாத்திரத்திற்கு திருமந்திரம் என்றும், தோத்திரத்திற்குத் திருவாசகம் என்றும் புகழ்ந்து பேசியுள்ளார்.

சைவ சமயத்திற்கான தத்துவ ஞானக் குவியலாக திருமந்திரம் விளங்குகின்றது என்பதைச் சான்றோர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பிற்காலத்திலே சைவ சாத்திரங்கள் மெய்கண்ட நாயனார் தொடங்கிப் பல அருளாளர்களால் தொகுக்கப்பட்டிருப்பினும் திருமந்திரத்தில் காணப்படும் சாத்திரக் கருத்துக்கள், மெய்கண்ட சாத்திரங்களின் தத்துவங்களுக்கு அடிப்படையாக உள்ளன என்றும் பெருமதிப்பிற்குரிய பெரும் பேராசிரியர் வெள்ளை வாரணர் போன்ற அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

இத்தகைய அரும்பெரும் படைப்பினை உலகிற்கு ஈந்த திருமூல தேவ நாயனாருடைய வாழ்க்கை வரலாற்றினைப் பற்றி மேலும் பல சிறப்பு வகைகளிலே சிந்திக்க முயல்வோம்.

(தொடரும்)

★★★

# ஆன்மீகம்

- **திருமிகு ச. சாவர்க்கர்,** இ.ஆ.ப. (ஓய்வு),
செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வரிமேம்பாட்டுக் குழு, தமிழக அரசு.

★ உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்று ஓடுவதுபோல என்றாவது ஏதாவது ஒரு காரணத்தால் பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு எண்ணம் ஏற்பட்டு விடும்.

★ இறைவனை இடைவெளியில்லாமல் இடைவேளை இல்லாமல் நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு களைப்பு ஏற்படுவதில்லை. களிப்பும் திளைப்பும் மட்டுமே ஏற்படுவது திண்ணம்.

★ இறுதித் தேர்வு நுழைவுத் தேர்வு ஆகியவைகளில் அதிக மதிப்பெண் பெற்று மேல்படிப்பிற்குத் தகுதியிருந்தாலும் ஏற்படுத்தப்பட்ட இடங்களுக்கு மேல் அனுமதியளிப்பதில்லை. முக்தி பெறத் தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் இடமில்லை என்ற பேச்சிற்கு இடமில்லாமல் முக்தி கிடைத்துவிடும்.

★ ஓர் ஆண் பெண்ணைக் காதலித்தாலோ அல்லது ஒரு பெண் ஓர் ஆணைக் காதலித்தாலோ அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. மறுத்துவிடலாம். ஆனால் ஆணோ பெண்ணோ இறைவன் மீது அன்பு செலுத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேன்மேலும் வளர்வதற்கும் இறைவனால் ஊக்குவிக்கப்படுவார்கள்.

★ முயன்றாலும் முடியாதென்பதால் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா என்று கேலிபேசுவார்கள். ஆனால் இறைவனை அடைவதற்கு யாரும் முயற்சி செய்து வெற்றி பெறலாம்.

★ இறைவன் சன்னிதானத்தில் இட ஒதுக்கீடு முறை இல்லாததால் முழுத்தகுதி பெற்ற பின்னரே யாரும் இறைவன் திருவடியில் இணைய முடியும்.

★ நம்முடைய ஆன்ம வளர்ச்சியின் அளவும் ஆழமும் அருளாளர்களின் பாடல்கள் பாசுரங்கள் ஆகியவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரிந்துவிடும்.

★ உலகியல் வாழ்க்கையில் எதிலும் நேர்மையான வழியில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்கிற குறிக்கோள் தவறில்லாதது. ஆனால் சாதாரணமானது, இறைவன் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பிடிக்க வேண்டும் என்கின்ற குறிக்கோள் தான் உன்னதமானது.

★ முட்டாள் என்று ஒருவனைச் சொன்னால் எப்படி சொல்லப்படுகிறவனது கோபத்துக்கு ஆளாவோமோ அதுபோன்று இறைவனது திருநாமத்தைச் சொல்லும்பொழுது இறைவனது அன்பிற்கு ஆளாவோம். சொல்லுக்கும் மந்திரத்திற்கும் அப்படியொரு மகிமை உண்டு.

★ இளமையில் கல் என்பது போல ஆன்மீகப் பயிற்சியையும் இளமையிலிருந்தே மேற்கொள்ள வேண்டும். ஒத்திப்போட்டால் வாய்ப்பு கிட்டாமல் கூட போய்விடும்.

★ கேட்டு சிந்தித்து தெளிவு ஏற்பட்டாலும் கூட நிஷ்டை கூடுதல் (செயல்படுத்துதல்) இல்லையென்றால் ஆன்ம வளர்ச்சி ஏற்படாது.

★ ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதற்கு உடல் வளர்ச்சி அதனால் ஏற்படுகிற கிளர்ச்சி முக்கியக் காரணமாக இருக்கிறது. ஆனால் அது முதன்மைக் காரணமாகாது. இறைவனை நெருங்குவதற்கு திருமணம் பயிற்சிக் களமாக அமைகிறது என்பதுதான் முதன்மைக் காரணமாகும்.

★ அடுத்த பிறவியில் நீதான் என் தாயாகப் பிறக்க வேண்டுமென்றும், நீதான் என் மகளாக, மகனாகப் பிறக்க வேண்டும் என்றும் சொல்வது, நினைப்பது மேலும் மேலும் பிறவிக்கு வித்தாகும் என்பதை நாம் அறிவதில்லை.

★ ஆன்ம வளர்ச்சி அடைந்து வருபவனுக்கு விதிவசத்தால் சலனமோ சபலமோ ஏற்பட்டாலும் உடலால் தவறு செய்யமாட்டான். ஆனால் அவனுடைய ஆன்மீக வளர்ச்சிக்குத் தடை ஏற்பட வாய்ப்புண்டு.

★ எத்தனையோ பட்டம் வாங்கியுள்ள மருத்துவர்களுக்கும் நோய் வருவதுபோல இறையன்பர்களுக்கும் துன்பம் நேருகிறது. ஆனால் துன்பத்தை எதிர்கொள்ளும் திறம் பெற்றிருக்கிறார்கள்.




29-5-03 அன்று குன்றத்தூரில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் அவர்கள் தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளுக்குப் பொன்னாடை அணிவிக்கிறார்கள்.

---

★ இறைவன் மீது பற்றும் பயமும் உள்ளவனே துன்பத்தையும் தொல்லையையும் பயமில்லாமல் ஏற்றுக் கொள்ள முடியும்.

★ எதையும் நான் நினைத்தேன், நான் செய்தேன் என்று சொன்னால் நான் என்ற அகங்காரத்தினால் சொல்வதாக நினைக்கிறார்கள். கடவுள் அருளால் நினைத்தேன் செய்தேன் என்று சொன்னால் கடவுள் அருள் உள்ளதுபோல் பாசாங்கு செய்கிறான் என்று சொல்வார்கள். ஆகையால் நான் என்பது எண்ணத்தால் அழிக்க வேண்டிய ஒன்றாகும்.

★ அகால மரணம் என்பது ஒன்று கிடையாது. மரணத்திற்கான தருணம் வந்து விட்டால் மரணம் எவ்வகையிலும் ஏற்பட்டுவிடும்.

★ ஏழைகளுக்கும் பசித்தவர்களுக்கும் உணவளிப்பது மட்டுமே அன்னதானம் என்று கருத வேண்டியதில்லை. விருந்தோம்பலும் ஒரு வகையில் அன்னதானமே.

★ உயிர் கடைத்தேற வைத்தியம் மேற்கொள்பவனுக்கு உடல் ஒரு பொருட்டே அல்ல. உடல் நோயைவிட உயிர்நோயே கொடியது.

★ விருப்பத்தினாலோ அல்லது விரக்தியினாலோ உலக வாழ்க்கையை வெறுக்கும் மனப்பக்குவம் வந்துவிட்டால் இரண்டிற்கும் ஒரே மாதிரிப் பலனே கிடைக்கிறது.

★ யோகிகளிடம் கற்றுக் கொள்ளும் யோகா பயிற்சியே பலனளிக்கும்.

★ நினைத்தாலே முக்தி என்று சொல்லப்படும் திருத்தலத்திற்குச் சென்று இப்பொழுது முக்தி வேண்டாம் என்று நினைத்தால் இறைவன் வற்புறுத்தி முக்தியைத் திணிப்பதில்லை.

★ பாடத்திட்டத்தின் சுமை அதிகமாக இருப்பதால், பள்ளி மாணவர்களோ கல்லூரி மாணவர்களோ விளையாட்டில் கவனம் செலுத்துவது, கோயிலுக்குச் செல்வது போன்றவைகளுக்கு நேரம் இல்லாமல் இருக்கிறது. இந்தக் காரணங்களால் பெற்றோர்களே பிள்ளைகளுக்கு வீட்டிலேயே ஆன்மீக உணர்வை ஊட்ட வேண்டும்.

★ முக்தியில் மட்டுமே விருப்பமுற்று முயற்சி செய்யும், இறையன்பர்களுக்கு அபிராமியின் அருளால் தனம், கல்வி, தளராத மனம், தெய்வ வடிவம் இன்னும் பிறவும் கிடைக்கும் என்பது முக்திக்கான பயணம் செய்யும்பொழுது வழியில் கிடைக்கும் பேறுகளாகும். முக்தியைத் தவிர மற்றவைகளை விரும்புகிறவர்களுக்கு கேட்பது கிடைக்காமல் போய் ஏமாற்றமடைய வாய்ப்புண்டு.

★★★

# திருஞான சம்பந்தர் அருளிய இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

(முன்தொடர்ச்சி)

''வையம் மகிழயாம் வாழ அமணர் வலி தொலைய
ஐயன் பிரம புரத்துஅரற்கு அம்மென் குதலைச்
செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற்றனன் என்பர் ஞானசம்
பந்தனையே''

என நம்பியாண்டார் நம்பிகள் ''திருத்தொண்டர் திருவந்தாதி''யில் நம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைப் போற்றிப் புகழ்கின்றார்.

உமாதேவியாரிடம் ஞானப்பால் குடித்த நம் திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் பல அற்புத அருள் செயல்கள் புரிந்துள்ளமையை மிக விரிவாகக் கண்டு மகிழ்ந்து வருகின்றோம்.

திருஞான சம்பந்தரை மகவாகப் பெறும் தவம் புரிந்தவர் பகவதி அம்மையார்.

''அப்பதியில் அந்தணர்தம் குடிமுதல்வர் ஆசுஇல் மறை
கைப்படுத்தச் சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத இருதயர் என்று
இப்புவி வாழத் தவம்செய் இயல்பினார் உளரானார்''

''மற்றுஅவர்தம் திருமனையார், வாய்ந்தமறை
மரபின்வரு
பெற்றியினார் எவ்வுலகும் பெறற்கரிய
பெருமையினார்
பொற்புஉடைய பகவதியார் எனப்போற்றும்
பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பாய் கணவனார் கருத்து
அமைந்தார்''

எனத் திருஞானசம்பந்தர் தம் தாயார் பகவதியாரின் பெருமைகளை விரித்துக் கூறும் சேக்கிழார் பெருமான் பகவதியார் மணிவயிற்றில் உலகு உய்ய... சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்'' என்று எடுத்துக் காட்டுகின்றார்.

அத்தகைய பகவதியார் பிறந்த பெரும் சிறப்பினைப் பெற்ற ஊர் ''திருநனிப்பள்ளி'' எனும் ஊராகும்.

''ஆளுடைய பிள்ளையார்
தமை முன்னம் அளித்த தாயார்
முன்உதிக்க முயன்ற தவத்திரு நனிபள்ளி''

என்று இத்திருநனிபள்ளி தலத்தைச் சேக்கிழார் பெருமான்போற்றுகின்றார்.

பகவதியார் பிறந்த நனிபள்ளி எனும் இத்தலம் வளம் குன்றிப் பாலை நிலமாகத் திகழ்ந்துள்ளது. ஞானப் பாலை உண்ட பாலறாவாயர் பார்வை பட்டதும் அது சோலையாக மாறிவிட்டது. இத்திருத்தலத்தில் நம் திருஞானசம்பந்தர் பாடிய பாலையைச் சோலை யாக்கிய அற்புதத் திருப்பதிகம் 'காரைகள் கூகை முல்லை'' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஆகும். ''பியந்தைக் காந்தாரம்'' பண்ணில், பாலறாவாயர், தம் தந்தையாரின் தோள்மேல் வீற்றிருந்து பாடிய அற்புதத் திருப்பதிகம் இப்பதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவபாத இருதயர் தோன்றும் சிறப்பினைப் பெற்ற சீர்காழித் திருத்தலம் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டு ''தோடுடைய செவியன்'' எனப் பதிகம் பாடியதால் சிவலோகம் என விளங்கிச் சிறப்பினைப் பெற்றது என்று கூறும் நம் சேக்கிழார் பெருமான் நம் திருஞான சம்பந்தர் பாதம் கூட படவில்லை. தந்தையார் தோளின் மீதிருந்தே திருநனி பள்ளியைக் கண்ணுற்றபோதே பாலையாய் திகழ்ந்த நனிபள்ளி தவத்திரு நனிபள்ளியாய்ச் சோலையாய் மாறிவிட்டது என்று நமக்கு உணர்த்துகின்றார்.

திருநனிபள்ளியை நம் திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகச் சிறப்பையும்

''காரைகள் கூகை முல்லை
எனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீர்இயல் பதிகம் பாடித்
திருக்கடைக் காப்புத் தன்னில்



குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் அவர்களுக்கு இணை ஆணையாளர் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம் பி.ஏ. பி.எல். அவர்கள் பொன்னாடை அணிவிக்கின்றார்.

நாரிஓர் பாகம் வைகும்
நனிபள்ளி உள்குவார்தம்
பேரிடர் கெடுதற்கு ஆணை
நமது எனும் பெருமை வைத்தார்''

*(திருஞானசம்பந்தர் புராணம் 115)*

எனக் காட்டுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

திருஞானசம்பந்தர் திருநோக்கம் பட்டதுமே வான் நனையும் மலர்ச்சோலை நிறைந்ததாக நனிபள்ளியை மாற்றியது இப்பதிகத்திற்குச் சேரும் முதற் சிறப்பு.


ஞானப்பால் உண்ட நம் ஞானசம்பந்தர் சீர்காழியை பாடியதற்கு அடுத்ததாகப் பாடி நனிபள்ளித் திருத்தலத்திற்குப் பெருமை சேர்த்தார் என்பதும் இப்பதிகத்திற்கு சேரும் அடுத்த சிறப்பு.

ஞானக் குழந்தையின் திருப்பாதம் வலிக்குமே எனத் தந்தையார் தம் தோள்மேற்கொண்டு திருநனிப்பள்ளிச் செல்ல தந்தையார் தோள்மேல் இருந்தவாறே இப்பதிகம் பாடினார் என்பதும் இப்பதிகத்திற்கு உள்ள மற்றொரு சிறப்பு.

இத்திருப்பதிகத்தை யாரொருவர் சிந்திக்கிறார்களோ, அப்பொழுதே அவர்கள் வினை கெடாத் திருஞானசம்பந்தர் தம்மேல் ஆணையிட்டுப் பாடிய சிறப்புமிக்கது இப்பதிகம் என்பதும் இப்பதிகத்திற்கு உள்ள மணிமகுடமான சிறப்பாகும்.

இப்பதிகத்தின் முதற் பாடலையும், திருக்கடைக் காப்புப் பாடலையும் ஈங்கு இனிதே கண்டு மகிழ்வோமாக!

''காரைகள் கூகை முல்லை களவாகை ஈகை
படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடுகாடமர்ந்து
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயன்மேதி வைகு
நனிபள்ளி போலும் நமர்காள்.'' 1



இத்தகைய சிறப்பு வாய்ந்த ''காரைகள் கூகை முல்லை'' எனத் தொடங்கும் இரண்டாம் திருமுறைக் கண் பியந்தைக் காந்தாரப் பண்ணில் அமைந்து விளங்கும் சீர் இயல் பதிகம் பாடுவோர்தம் பாலை வாழ்வும், சோலை வாழ்வாகச் சீர்பெறுதல் திண்ணம் ஆகும்.

இவ்விரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்கும் பிற பதிகங்களும் பற்பல அற்புதங்களைப் பாடுவார் வாழ்வில் உண்டாக்கும் திருப்பதிகங்களே ஆவது திண்ணம்.

''திருமுறை''யில் கயிறு சார்த்திப் பார்த்தல் அன்றும் இன்றும் சைவப் பெருமக்களிடம் பெரு வழக்காய் இருந்து வருதல் கண்கூடு.

திருநாவுக்கரசு சுவாமிகளின் விண்ணப்பத் திற்கு இணங்க அவர்தம் திருமேனி மீது சூலம், இடபக்குறி இட சிவபெருமான் திருவருள் புரிந்த ஒப்பற்ற திருத்தலம் பெண்ணாகடம் ஆகும்.

இத்திருத்தலத்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்திருந்த அச்சுதக் களப்பாளர் என்ற சிற்றரசர் தமக்கு மக்கட் செல்வம் இல்லாத குறை நீங்க வழி உண்டா எனத் தம் குருநாதர் சகலாகம பண்டிதரிடம் சென்று வணங்கி வேண்ட அவர் திரு முறையில் கயிறு சார்த்திப் பார்க்க, திருஞானசம்பந்தர் அருளிய

''பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே''

என்ற இரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங் கும் திருவெண்காட்டுத் திருத்தலப் பதிகப் பாசுரம் கிடைத்தது என்பதும், இப்பாசுரத்தில் கூறியபடியே அச்சுதக் களப்பாளரும் அவர்தம் மனைவியரும் திருவெண்காட்டுத் திருத்தலம் சென்று சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகிய முக்குளங் களிலும் நீராட, ஞாலமெல்லாம் கொண்டாடும் ஞானச் சூரியர் ஆக ''சிவஞானபோதம்'' நமக்கு அருளிய ''மெய்கண்ட தேவன் மிகு சைவநாதன்'' தோன்றினார் என்பதும் ஒரு அற்புத வரலாறாகும்.

*12 சூத்திரங்களில் 40 அடிகளில் 216 சொற்*

''கடல்வரை ஓதமல்கும் கழிகானல் பானல்
கமழ் காழி என்று கருதப்
படுபொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்றவத்தர் பியன்மேல் இருந்து
இசையால் உரைத்த பனுவல்
நடுஇருள் ஆடும்எந்தை நனிபள்ளி உள்க
வினைகெடுதல் ஆணை நமதே'' 2

பாலையை நெய்தல் ஆக்கிய திருஞான சம்பந்தர்தம் இப்பதிக அற்புதத்தை நம்பியாண்டார் நம்பிகள் ''ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை''யில்

''ஒண்கெழுவு
ஞாலத்தினர் அறிய மன்னு நனிபள்ளியது
பாலைதனை நெய்தல் ஆக்கியும்''

எனப் பாடிச் சிறப்பித்திருக்கக் காண்கின்றோம்.

களில் 624 எழுத்துக்களில் உலகமெலாம் கொண்டாடத் தக்க சைவ சித்தாந்தக் கருவூலத்தை வழங்கியருளிய மெய்கண்டசிவம் தோன்றுவதற்கு வித்திட்ட ''பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு ஆயினவே வரம் பெறுவர், ஐயுற வேண்டா ஒன்றும்'' என உறுதி கூறும் சீகாமரப் பண்ணில் அமைந்த பாசுரமும், இவ்விரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்குவது நாம் அறிந்து இன்புற வேண்டிய அற்புதச் செய்தியாகும்.

திருமுறைகள் கற்பார், கேட்பார் அனைவரும் பெறக்கூடிய பலன்களைத் தொகுத்து இனிதே கூறும்

''மண்புகார் வான்புகுவர் மனம்இளையார் பசியாலும்
கண்புகார் பிணிஅறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார் சாய்க்காட்டெம் தலைவன்தாள் சார்ந்தாரே''

எனத் தொடங்கும் 'சீகாமரம்' பண்ணில் அமைந்த திருச்சாய்க்காடு திருத்தலப் பதிகமும் இவ்விரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்குகின்றது.

''தனம்தரும் கல்விதரும்'' என அபிராமி பட்டர் பாடுதற்கு அடிஎடுத்துக் கொடுத்ததுபோல் அமைந்துள்ள

''தனம்வரும் நன்மை ஆகும் தகுதிக்கு உழந்து
வருதிக்கு உழன்ற உடலில்
இனம்வளர் ஐவர் செய்யும் விநயங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனம்ஒருகால் மூன்றுபுரம் வெந்து மங்கச்
சரம் மூன்று எரிந்து அவுணர்
சினம் ஒருகால் அழித்த சிவன் மேயச்
செல்வத் திருநாரையூர் கைதொழவே''

என்ற பாசுரம் அமைந்த திருநாரையூர் திருப்பதிகமும் இவ்விரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்கு கின்றது.

''மனிதரைப் பாடாது ஈசனையே பாடிப் பயன் பெறுக'' என அறிவுறுத்தும்

''நச்சிநீர் பிறன்கடை நடந்துசெல்ல நாளையும்
உச்சி வம் எனும் உரைஉணர்ந்து கேட்பதன்முனம்
பிச்சர்நச்சு அரவரைப் பெரிய சோதி பேணுவார்
இச்சை செய்யும் எம்பிரான் எழில்கொள் காழி
சேர்மினே''

என அறிவுறுத்தும் நட்டராகம் பண்ணில் அமைந்த சீர்காழித் திருப்பதிகம் இவ்விரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்குகின்றது.

அல்லல் மிக்க வாழ்க்கையை - பொன்றுகின்ற வாழ்க்கையை - துக்கம் மிக்க வாழ்க்கையை ஆனந்த மயமான வாழ்க்கையாக்கிட ஆண்டவனையே வணங் குங்கள் என அறிவுறுத்தும்

''அல்லல்மிக்க வாழ்க்கையை ஆதரித் திராதுநீர்
நல்லதோர் நெறியினை நாடுதும் நடம்மினோ''
''துக்கமிக்க வாழ்க்கையைச் சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப்
போதுமின்''

எனப் பாடும் திருக்கோடிகா திருப்பதிகமும் இவ் விரண்டாம் திருமுறைக் கண்ணே அமைந்து விளங்கு கின்றது.

''நீடுலாவிய நிமலனைப் பணிபவர்
நிலைமிகப் பெறுவாரே''

என அறிவுறுத்தும் திருக்கீழ்வேளூர் திருப்பதிகமும்,

''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ் சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே''

எனத் தொடங்கும் திருவலஞ்சுழி திருப்பதிகமும் இவ்விரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்கு வது குறிப்பிடத்தக்கது.

இன்னும் திருக்கோமூத்திரி, திருச்சக்கரமாற்று என்னும் புதுமைமிக்க யாப்பில் அமைந்த திருப் பதிகங்களும், திருவூர்க்கோவை எனத் திருத்தலங் களைப் பட்டியலிட்டுக் காட்டும் திருப்பதிகமும் கூட இவ்விரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்கு கின்றன. ஆம்! நம் ஞானசம்பந்தர் அருளிய இத்தகைய அற்புத திருப்பதிகங்களை எல்லாம் பாடியும் ஆடியும் வழிபட நாம் என்ன புண்ணியம் செய்தோமோ என்று நாம் ஏத்திக் கொண்டாடி மகிழ்ந்திடுவோமாக.

(இரண்டாம் திருமுறை நிறைவு பெற்றது).

* * *

# திருத்தணிகை

- புலவர் செந்துறைமுத்து

முருகப்பெருமான் குடிகொண்டு எழுந்தருளிய முக்கிய பதிகளுள் திருத்தணிகையும் ஒன்றாகும். திருத்தணிகைமலை, சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் பாதையில் உள்ளது. அரக்கோணத்திலிருந்து வடக்கே சுமார் 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இம்மலைக்குச் செல்வதற்குப் புகைவண்டி வசதியும் பேருந்து வசதியும் உண்டு. திருத்தணிகை புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் இம்மலை அமைந்துள்ளது. சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் அரசுப் பேருந்து திருத்தணிகை வழியாகச் செல்கின்றது. திருப்பதியில் எழுந்தருளிய திருவேங்கடவனைக் கண்டு வழிபடும் அன்பர்கள், திருத்தணிகை சென்று முருகப் பெருமானையும் கண்டு வழிபட வேண்டியது முறையாகும்.

முருகப்பெருமான் வள்ளி நாயகியை மணம் செய்யும் பொருட்டு வந்து தங்கிய பதி திருத்தணிகை. எம்பெருமான் சூரபதுமன் முதலிய அவுணர்களைப் பொருது வெற்றிகொண்டு, பின்னர்ச் செருத்தணியுமாறு வந்து தங்கிய பதி திருத்தணிகை. திருத்தணிகை மலையும், அதனைச் சார்ந்த பகுதிகளும் 'திருத்தணி' என்றும், 'தணிகை' என்றும் வழங்கப் பெறுகின்றது; கந்தப்புராண நூலாசிரியர் 'செருத்தணி' என வழங்கியுள்ளார்.

மலர்களில் சிறந்தது தாமரை; நதிகளில் சிறந்தது கங்கை; பதிகளில் சிறந்தது காஞ்சியம் பதி; மலைகளில் சிறந்தது தணிகைமலை என்றும் அழகு மிகக் கந்தப்புராண நூலாசிரியர் புகன்றுள்ளார். இதனை,

''விரையி டங்கொளும் போதினுள் மிக்க பங்கயம்
போல்
திரையிட ங்கொளும் நதிகளிற் சிறந்த கங்கையைப்
போல்
தரையி டங்கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்
போல்
வரையி டங்களில் சிறந்ததித் தணிகைமால்
வரையே''

என்னும் கந்தப்புராணப் பாடலால் அறியலாகும்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், தணிகையின் சிறப்பைக் கூறுங்கால்,

''புவிமீதே பிரபலமுள்ள சுத்ததணிமலை''
என்றும்,

''இமையவர் பணிதிருத்தணி பொற்பதி''
என்றும்

''எத்திக்கு முற்ற புகழ் வெள்ளித் திருத்தணி''
என்றும்,

''திரைகடல் சூழும் புவிக்குயிராகும் திருத்தணி'' என்றும் போற்றிக் கூறியுள்ளார்.

தணிகைமலை திருக்கயிலாய மலையைப் போன்ற பெருமை வாய்ந்தது என்றும் கந்தப்புராண ஆசிரியர் கூறியுள்ளார். இம்மலைக்குச் சென்று வழிபடுவோர் சிறந்த பேறு பெறுவர் என்றும், தீவினைகள் நீங்கப் பெறுவர் என்றும் கூறுவர். இதற்கேற்ப மக்கள் திரள் திரளாகச் சென்று தணிகைப் பெருமானைக் கண்டு வழிபட்டு செல்வதைக் காண்கின்றோம்.

தணிகைப்பதியின் சிறப்பினை முருகப் பெருமானே வள்ளி நாயகிக்குக் கூறுங்கால், பல குற்றங்களைச் செய்தவராயினும், அவர்கள் அன்போடு தணிகை மலையை வந்து அடைவாரேயானால், பிரம்மனை விடவும், திருமாலை விடவும், பிற சிறந்தோரை விடவும் மேலானவராவார் என்று கூறியுள்ளார். இதனை,

''பாதகம் பல செய்தவ ராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவராயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமிய ரெவற்றினு மிக்கார்''

என்னும் கந்தப்புராணப் பாடலால் அறியலாகும்.

தொண்டை நாட்டு மேற்பாடி என்ற ஊரின் அருகில் வள்ளிமலை என்று ஒரு மலை உண்டு. அம் மலையையும், மலையைச் சார்ந்த பகுதிகளையும்

நம்பி என்னும் வேடன் ஆண்டு வந்தான். அந்நம்பி ராசன், தன் குலக்கடவுளாகிய முருகப் பெருமானை வழிபட்டு வந்தான்.

அம்மலைப் பகுதியில் ஒரு மான் சூல்கொண்டிருந்தது. அம்மான், அம்மலைப் பக்கத்தில் வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுத்த ஆழ்ந்த ஒரு குழியில் ஒரு குழவியை ஈன்றது. அக்குழவி மானிடக் குழவியாய் இருந்ததைக் கண்ட மான் அவ்விடத்தை விட்டு அஞ்சியோடி விட்டது. அக்குழவி அவ்விடத்திலேயே அழுதவண்ணம் கிடந்தது. அப்போது அப்பகுதியில் வேட்டையாடி நீர் வேட்கையால் அங்கு வந்த நம்பிராசன் அக்குழந்தையைக் கண்டான். அதன் அழகைக் கண்டு மகிழ்ந்த அவன் அக்குழந்தையை எடுத்துத் தன் மனைவியிடம் கொடுத்தான். அவளும் அக்குழந்தையை அன்புடனும் மகிழ்வுடனும் வளர்த்தான். வள்ளிக்கிழங்கின் பாதங்களில் கிடந்ததால் 'வள்ளி' என்னும் பெயரையும் சூட்டினான்.

வள்ளி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உரிய பருவத்தையடைந்தாள். வள்ளியின் அழகும் நாளுக்கு நாள் மிகுந்தது. நம்பிராசன் தன் குலமுறைப்படி வள்ளியைத் தினைப்புனக் காவலில் இருத்தினான். வள்ளியும் பரண்மீது இருந்து தினைப்புனம் காத்துக்கொண்டிருந்தாள்.

அப்போது அப்பக்கம் வந்த நாரத முனிவர், வள்ளியின் எழிலைக் கண்டு, இவட்கு ஏற்ற மணாளன் 'கந்தனே' எனக் கருத்திற் கொண்டு, தணிகைக்குச் சென்று முருகப்பெருமானிடம் வள்ளியின் எழிலை எடுத்துக் கூறினார். முருகப் பெருமானும் இவளை மணக்க விரும்பினார்.

வள்ளியை மணந்து கொள்ள விரும்பிய வடிவேற் பெருமான், தம் தெய்வ உருவை விடுத்து மானுட உருவெடுத்து வேடனாக அத்தினைப்புனம் பக்கம் சென்று வள்ளியைக் கண்டார். வேடனாக வந்த முருகப் பெருமான் வேங்கையாக மாறி முதியவராகி, யானைமுகத்தோன் அருளால் பின்னர் வள்ளி நாயகியை மணந்தார்.

முருகனென அறியாமல் வள்ளியை கவர்ந்த வேடுவனுடன் போர் புரிந்த நம்பிராசன், பின்னர் வேடனை முருகனெனத் தெளிந்து தன் குற்றம் பொறுக்க வேண்டினான். முருகப்பெருமான் நம்பிராசன், வள்ளியின் தோழியர் முதலியோர்க்கு அருள் செய்துவிட்டு, வள்ளியுடன் தணிகைமலை வந்து தங்கினார்; தணிகைமலையில் எழுந்தருளித் தம்மை நாடி வரும் அன்பர்கட்குத் திருவருள் புரிந்து வருகின்றார்.

திருத்தணிகை நகரில் நடுவில் சுமார் நானூறு அடிகள் உயரத்தில் தணிகைமலை அமைந்துள்ளது. மலையின் முகட்டில் நான்கு பிரகாரங்களுடன் அழகு மிகுந்த ஆறுமுகப் பெருமானின் திருக்கோயில் அமைந்துள்ளது.

இம்மலையின் இருமருங்கும் மலைத் தொடர்கள் இருக்கின்றன. வடக்கே உள்ள மலை சற்று வெண்மையாக இருப்பதால், அதனைப் பச்சரிசி மலை என்றும் கூறுவர். தெற்கே உள்ள மலை சற்றுக் கருமையாக இருப்பதால், அதனைப் பிண்ணாக்கு மலை என்று கூறுவர்.

மலையின் அடிவாரத்தில் சரவணப்பொய்கை அமைந்துள்ளது. இப்பொய்கையை முருகப் பெருமான் சிவ வழிபாட்டிற்காக வரவழைத்த கங்கா தீர்த்தம் என்றும், இக்காரணத்தால் இதனைக் குமார தீர்த்தம் என்றும் புராண நூல்கள் கூறுகின்றன.

மலையின் உச்சியை அடைந்ததும் நான்காவது பிரகாரமாகிய இரதவீதியின் கிழக்குப் பாகத்தைக் காணலாம். இப்பாகத்தில் கார்த்திகை தினங்களில் வேண்டுதல் கற்பூரம் எரியும் கற்பூரக் கொப்பரையும், நாள்தோறும் வழிபாட்டுக் காலங்களில் முகமதிய மக்கள் வாத்தியம் வாசிக்கும் நவாப் வாத்திய மண்டபமும் அமைந்துள்ளன. காதர் என்ற நவாப் தனது துன்பத்தை அகற்றியதற்கு அறிகுறியாக இந்த வாத்திய மண்டபத்தையும், தனது பெயரால் பிரசன்ன காதரீசுவரர் என்ற சிவன் கோயிலையும் இக்கோயிலில் அமைத்ததாக வழங்கப்படுகின்றது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான், வள்ளிமலை சுவாமிகளுக்கு ஒரு முகமதியப் பெரியவர் உருவில் காட்சியளித்ததாகவும் கூறப்படுகின்றது. இந்நான்காவது பிரகாரத்தில் இந்திர நீலச்சுனை என்ற சுனையும் விஷ்ணு தீர்த்தம், நாக தீர்த்தம் என்ற தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

நான்காவது பிரகாரத்திலிருந்து கிழக்கு வாயில் வழியாகச் சில படிகள் ஏறிச் சென்றால் மூன்றாவது பிரகாரத்தை அடையலாம். இம்மூன்றாவது பிரகாரத்தின் கீழ்ப்பாகத்தில் துவஜஸ்தம்ப விநாயகரையும் ஐராவதத்தையும் தெற்குப் பாகத்தில் உமாமகேசுவரர் சன்னதியையும், மேற்கு பாகத்தில் உச்சிப் பிள்ளையார் சன்னதியையும் காணலாம்.

மூன்றாவது பிரகாரத்திலிருந்து இரண்டாவது பிரகாரத்திற்குச் செல்லும் வாயிலின் தென்புறம் பிரசன்ன காதரீசுவரர் சன்னதியும் முகப்பில் காணிக்கை செலுத்துவதற்கான உண்டியலும் அமைந்துள்ளன.

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா வரும் 6-7-03 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சிறப்புற நடைபெற உள்ளது.

குன்றம் எறிந்த தென்தணிகைக் குமரன் திருக்குட நீராட்டு விழாவைக் கண்கள் பெற்ற பயனாகக் கண்டு இன்புறுமாறு வேண்டுகின்றோம்.

இவ்விரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பக்கத்தில் ஏகாம்பரேசுவரச் சன்னதியும், மேற்குப் பக்கத்தில் ஆறுமுகசுவாமி சன்னதியும், வடக்கு பக்கத்தில் முருகனால் வழிபடப் பெற்ற குமரேசுவர லிங்கத்தின் சன்னதியும், தேவயானைக்கு இந்திரன் சீதனமாக அளித்த சந்தனக்கல்லும், உருத்திராக்க விமானத்தில் வீற்றிருக்கும் பெரிய உற்சவ மூர்த்தியின் சன்னதியும் அமைந்துள்ளன.

பஞ்சாட்சரப் படிகள் என்று வழங்கப்படுகின்ற ஐந்துபடிகள் முதற் பிரகாரத்திற்கு அழைத்துச் செல்கின்றன. தாபன மண்டபம், அர்த்த மண்டபம் முதலியவைகளைக் கடந்து அடையும் முதற் பிரகாரம் கர்ப்ப கிருகத்தைச் சுற்றிச் செல்கின்றது. இப்பிரகாரத்தின் தென் பகுதியில் வள்ளியம்மன் சன்னதியும் வடக்குப் பகுதியில் தேவயானை சன்னதியும் அமைந்துள்ளன. இப்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் பால சுப்பிரமணியர் சன்னதியும், வடக்குப் பகுதியில் சண்டேசுவரர், பைரவர் முதலியோர் சன்னதிகளும் உள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் திருத்தணிகைப் பெருமானாகிய முருகன், சுந்தரவடிவினராய் இடக்கரத்தைத் தொடையில் அமைத்து வலக்கரத்தில் வேலினைத் தாங்கித் தனித்து நின்று அன்பர்கட்கு காட்சியளிக்கின்றார்.

சாத்திரங்களில் கூறப்பெற்றுள்ள முருகப் பெருமானின் பதினாறு வகைத் திருவுருவங்களில், தணிகைப் பெருமானின் திருவுருவம் 'ஞானசக்தீதரர்' என்னும் திருவுருவம் என்று கூறப்பெற்றுள்ளது.

மங்களம் தணிகாசலா!<br>
மங்களம் பக்தவத்சலா!<br>
மங்களம் சத்தியத்தனே!<br>
மங்களம் சுத்த நித்தனே!<br>
மங்களம் புவனேசனே!<br>
மங்களம் பவநாசனே!<br>
மங்களம் வள்ளி நாயகா!<br>
மங்களம் சுபமங்களம்!

- தணிகாசலப் புராணம்

★★★

# காகபுஜண்டரிடம் கருடன் கேட்ட வினாக்கள்

- பேராசிரியர் முனைவர் இரா. செல்வக்கணபதி

காகபுஜண்ட முனிவரே! கருணைமிக்கவரே! தங்களுக்கு என்பால் அன்பிருப்பது உண்மை என்றால், எளியேனைத் தாங்கள் தங்கள் அடியவனாக ஏற்றருள வேண்டும் என்று கூறிக் கருடன் பணிந்தான். மேலும், என் உள்ளத்தில் தங்கியிருக்கும் ஏழு வினாக்களுக்குத் தேவரீர் விடை இறுத்துத் தெளிவுறுத்த வேண்டும் என்றும் விண்ணப்பித்தான். காகபுஜண்டர் மகிழ்ந்து விடை கூற ஆயத்தமானார். கருடன் தன் ஐயங்களை வினாக்களாக்கிக் காகபுஜண்டர் முன் வைத்தான்.

1. எல்லாவற்றிலும் அரிதான பிறவி எது?
2. கொடிய துன்பம் யாது?
3. மேலான இன்பம் என்று எதனைக் கூறலாம்?
4. சாதுக்கள் மற்றும் துஷ்டர்களின் இயல்புகள் எப்படிப் பட்டவை?
5. வேதங்களில் கூறப்பட்ட மிகப்பெரிய புண்ணியம் எது?
6. மிகக் கொடிய பாவம் எது?
7. மனநோய்கள் எவை?

மாமுனிவரே! தாங்கள் எல்லாம் அறிந்தவர். தங்களுக்கு என்னிடம் பேரருள் உள்ளது. அருள்கூர்ந்து என் வினாக்களுக்கு விடை பகர்ந்து அருள வேண்டுமெனக் கருடன் பணிவுடன் வேண்டி நின்றான்.

காகபுஜண்டர் உளம் மகிழ்ந்தார். அன்பனே! மிகவும் கவனமாகவும், பக்தியுடனும் நான் கூறப் போகும் நீதிமொழிகளைக் கேட்டுக் கொள் என்று கூறிவிட்டு முனிவர் உரைக்கத் தொடங்கினார்.

## மனிதப் பிறவியின் மாண்பு

எல்லாவற்றிலும் அரிதான பிறவி மானுடப் பிறவியேயாகும். மனிதப் பிறவிக்கு ஈடான பிறவி வேறு இல்லை. 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்றும் அருளாளர்களும் உரைத்துப் போந்தனர். அசைவன-அசையாதன எனப் பகுக்கப்படும் உயிர்க் குலங்கள் அனைத்தும் மனிதப் பிறவியையே வேண்டி நிற்கின்றன. இப்பிறவிதான் நரகம், சுவர்க்கம், மோட்சம் எல்லாவற்றிற்கும் படிக்கட்டாக உள்ளது. இதுவே மங்களமளிக்கின்ற ஞானம், வைராக்கியம், பக்தி எல்லாவற்றையும் நல்க வல்லது. இந்த அரிய மனிதப் பிறவியைப் பெற்றும் எவன் கேடுகளுக்கெல்லாம் மூலமான புலனுகர்ச்சியில் மட்டும் ஆசை கொண்டு அலைகிறானோ அவனெல்லாம் வைரக் கல்லை எரித்துவிட்டு, ஓட்டாஞ்சில்லைப் பொறுக்குபவனாகவே இருப்பான்.

## கொடிய துன்பம்

உலகில் கொடிய துன்பம் என்பது ஏழ்மையே யாகும். ஏழ்மையை விடக் கொடிய துன்பம் உலகில் ஒன்றும் இல்லை. தமிழ் நூலாரும் 'கொடிது கொடிது வறுமை கொடிது: அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்று இதனையே கூறியுள்ளனர்.

## மேலான இன்பம்

மேலான இன்பம் தருவது நல்லோரிணக்கம் ஒன்று மட்டுமே. நல்லோர் இணக்கத்திற்கு ஈடான சுகம் உலகில் வேறு ஒன்றும் இல்லை.

## சாதுக்கள் துஷ்டர்கள் இயல்பு

கருடனே! மனம், மொழி மற்றும் மெய்களால் மற்றவர்களுக்கு உதவி செய்தலே சாதுக்களின் இயல்பு. அவர்கள் பிறர் பொருட்டுத் துன்பங்களைத் தாம் ஏற்றுக் கொள்ளும் இயல்பினர். துஷ்டர்கள் என்பவர்கள் பிறருக்குத் துன்பம் இழைக்க முயல்பவரேயாவர். சாதுக்கள், தன் பட்டையை உரித்துப் பிறர் ஆடையாக அணிந்து கொள்வதற்குப் பொறுத்தாற்றும் பூர்ஜ மரத்தைப் போல, பிறர் நன்மைக்காகத் தாங்கள் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வர். ஆனால், கொடியவர்கள் சுருக்குக் கொடிபோலப் பிறரைக் கட்டுப்படுத்தி மகிழ்வார்கள். தனக்கு நன்மை இல்லை என்று தெரிந்தும் பிறருக்குத் துன்பம் இழைப்பார்கள். பிறர் செல்வத்தை அழித்துத் தாமும் அழிவது துஷ்டர்கள் செயல். கொடியவர்களுக்கு வரும் மேன்மை, தீய கேது கிரகம் உதயமானாற் போல உலகுக்குத் துன்பமாகவே முடியும். சந்திரனும், சூரியனும் உதித்தால் உலகம் நன்மை அடைவது போல, சாதுக்கள் மேன்மையுற்றால் அது உலகுக்கு உபகாரமாக அமையும்.

# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **கருணைக் கடல் காகபுஜண்டர்** |
| நூலாசிரியர் | : | **முனைவர் இரா. செல்வக்கணபதி** |
| நூல் வெளியீடு | : | ஸ்ரீ நற்பணி அருட்கூடம், இடத் தெரு, திருப்பட்டினம் - 609 606 |
| பக்கங்கள் | : | 217 |
| விலை | : | **ரூ. 55.00** |

*இராமாயணக் காலத்தில், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் மதிக்கப்பட்ட ஒரு மாமுனிவராக வாழ்ந்திருந்தவர் ஸ்ரீ காகபுஜண்டர் ஆவார். நாடி ஜோதிடத்தை உலகிற்கு வழங்கிய முதல்வர் என்று அவரைப் புராணங்கள் போற்றுகின்றன.*

*''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்கள் மிக முயன்று ''கருணைக்கடல் காகபுஜண்டர்'' எனும் நூலை வடித்திருப்பது பாராட்டிற்கு உரியது.*

1. வரலாற்று மூலங்கள்
2. துளசி இராமாயணம்
3. தமிழ் நூல்களில் காகபுஜண்டர்
4. காகபுஜண்டர் - நூலாராய்ச்சி
5. காகபுஜண்டர் ஆலயம்

*எனும் ஐந்து தலைப்புகளில் தம் அரிய ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த மிகச்சிறந்த கருத்துக்களை எளிய இனிய நடையில் பேராசிரியர் முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்கள் இந்நூலில் வழங்கியுள்ளார்.*

*மெய்யன்பர்கள் அனைவரும் இவ்வரிய நூலை வாங்கிப் பயன்பெறலாம்.*

*காகபுஜண்டரிடம் கருடன் கேட்ட வினாக்களும், அவர் வழங்கிய விடைகளும் இங்கு அன்பர்கள் படித்துப் பயன்பெற அந்நூலிலிருந்து எடுத்து வழங்கப்பட்டுள்ளது.*

---

## பெரும் புண்ணியம்

வேதங்கள் சிறந்ததாகப் பெரிதெடுத்துப் பேசும் புண்ணியம் அகிம்மையே யாகும்.

## பெரும் பாவம்

மிகக் கொடிய பாவம் என்பது பிறரைத் தூற்றுவதேயாகும். சிவனையும், குருவையும் தூற்றுபவர்கள் ஆயிரம் பிறவிகளில் தவளைகளாகப் பிறப்பார்கள்.

பிரம ஞானிகளைத் தூற்றுபவர்கள் பல்வேறு கொடிய நரகத் துன்பங்களை அனுபவித்தபின் காக்கைகளாகப் பிறப்பார்கள்.


தற்பெருமை கொண்டு வேதங்களைத் தூற்றுபவர்கள் ரௌரவ நரகிடை வீழ்வர்.

சாதுக்களைத் தூற்றுவதில் மகிழ்பவர்கள் கோட்டான்களாவர். மோகம் என்ற இரவே அவர்களுக்கு உரியது. ஞானம் என்ற கதிரவன் அவர்களைப் பொறுத்தவரை உதித்தலே இல்லை.

எல்லோரையும் எப்போதும் தூற்றித் திரிபவர்கள் வௌவால்களாப் பிறந்து உழல்வர்.

## மனநோய்கள்

கருடனே! ஏழாவதாக மனநோய்கள் எவை என்று கேட்டாய்! கூறுவேன். மமதை என்பது சொரி



சிரங்கு. பொறாமை என்பது அரிப்பு. மகிழ்ச்சியும்-துன்பமும் கண்டமாலை. பிறர் மகிழ்ச்சி கண்டு வெதும்புதல் காசநோய். கொடுமையும், வஞ்சனையும் தொழு நோய்கள். அகங்காரம் பெரும் துயர் தரும் மூட்டு வலி. டம்பம், கபடம், திமிர், தற்பெருமை எல்லாம் நாக்குப் புழுத்தல். பேராசை ஜலோதரம். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை மூன்றும் மூன்று வரி நோய்கள். பொற்றாமையும், விவேகமின்மையும் இருவித ஜுரங்கள். இவ்விதம் பல கொடிய நோய்கள் உள்ளன. இவற்றுள் ஒரிரு நோய்களே மனிதனை அழிக்கவல்லன. இவை பலவும் தீராத நோய்கள். உயிரை அதன் வாழ்நாள் முழுதும் துன்புறுத்துவன. இவற்றால் பற்றப்பட்டவன் அமைதியை அடைவது எப்படி?

**மருத்துவம்**

கட்டுப்பாடுகள், நல்லறங்கள், நன்னடத்தைகள், தவம், ஞானம், யாகம், ஜபம், தானம் என்பனவாகிய மேற்குறித்த நோய்களை நீக்கவல்ல பல மூலிகைகள் உள்ளன. இதைத் தவிர சோகம், மகிழ்ச்சி, பயம், அன்பு, பிரிவாற்றாமை முதலியன காரணமாக வரும் நோய்கள் பல. மனோவியாதிகளில் இவை சிலவே. இவை யாவர்க்கும் உண்டு. ஆனால் இதை உணர்ந்தவர்கள் மிகச் சிலரே.

**கருடன் விடை பெறல்**

காகபுஜண்டர் உரைத்த விடைகளையும், அவர் உரைத்த மங்கள மொழிகளால் தான் பெற்ற மகிழ்ச்சியையும் கருடன் நன்றியுடன் நினைவுகூர்ந்து அவரை வணங்கினான். முனிவரே! தங்கள் உரையால் இராமன் திருவடிகளில் என் பக்தி புதுமை பெற்றது. மாயையினால் உண்டான எல்லாக் குழப்பங்களும் தீர்ந்தன. மதிமயக்கம் என்ற கடலில் மூழ்கிய எனக்குத் தாங்கள் கப்பல் ஆனீர்கள். ஐயா! தாங்கள் பலவிதம் எனக்கு மகிழ்ச்சி அளித்தீர்கள்! நான் இவற்றிற்கெல்லாம் கைமாறு செய்ய அறிகிலேன். நான் தங்கள் திருவடிகளை மீண்டும் மீண்டும் வணங்குகின்றேன் என்று பணிமொழி உரைத்துக் கருடன் காகபுஜண்டரிடம் அடிவணங்கி ஆசியும் விடையும் பெற்றுக் கொண்டு வைகுண்டம் சென்றான்.

★★★

# மாணிக்க வாசகரின் முற்பிறவி

- கலைமாமணி மா. இலட்சுமணன்

**மறுபிறவி என்பது உண்மையா? அப்படியென்றால் - இந்தப் பிறவிக்கும் முன்னே ஒரு பிறவி இருந்திருக்குமே? புராணங்கள் இதுபற்றி என்ன சொல்கிறது? முன்னோர்கள் என்ன சொல்கிறார்கள்?**

பூமிதனில் பிறப்பார்க்குப் பல பிறவிகள் உண்டு எனப் புராணங்கள் வலியுறுத்துகின்றன -

பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனைப் பார்த்த பாணர் ஒருவர் பல பிறவிகளில் பல தாய்மார்களிடம் தாம் குடித்த பாலைக் கணக்குப் போடும்போது திருப்பாற்கடல் மிகவும் சிறியது என்கிறார்! பிறவிகள் பற்றிய நம்பிக்கை உறுதியாகிறது.

பட்டினத்தடிகள் தமது தாயின் பிரிவை எண்ணி வருந்தும்போது ''எப்பிறப்பில் காண்பேன் இனி'' என்கிறார். பிறவிகள் பல உண்டு என்பதையே இவரது கருத்தும் வலியுறுத்துகிறது.

தமிழுக்கு நால்வர் எனப் புகழ்பெற்ற, அப்பர்-சுந்தரர்-மாணிக்க வாசகர்-திருஞான சம்பந்தர் பற்றிய ஒரு குறிப்பைக் கண்ணுறும் வாய்ப்பு கிடைத்தது. திருஞான சம்பந்தரின் முற்பிறவி ஏதும் குறிப்பிடப் படவில்லை. முருகனின் அவதாரம் எனக் கூறுவர். முருகன் பிறவான் இறவான் என அருணகிரி பாடியுள்ளார். திருநாவுக்கரசர் பற்றி தெளிவாகவே எழுதப் பெற்றிருக்கிறது.

இலங்கை அதிபதி இராவணன் பறக்கும் தேரிலே கயிலை மீது பறந்து ககன மார்க்கமாக செல்லும் வேளையில் - நந்தி தேவரால் தடுத்து நிறுத்தப்பட்டான்.

சினமடைந்த இராவணன் தேரிலிருந்து கீழே இறங்கி - கயிலை மலையையே கையிலெடுத்து எறிய முயன்றான்.

கயிலை குலுங்கியது - இதையறிந்த சிவபெருமான் - திருவடிவிரல் நுனியால் மலையை அழுத்த - இராவணன் மலையின் அடியில் அகப்பட்டு நசுங்கினான் - கதறினான்.

அவனது வேதனைக் குரலைக் கேட்ட வாகீச முனிவர் - இராவணன் மீது மனமிரங்கி - சிவபெருமானுக்கு மிகவும் பிடித்த சாமகானம் பாடினார்.. மனமிரங்கியே ஈசன் - இராவணனை மன்னித்து விடுவித்தார்.

இராவணனுக்காக வேண்டுகோள் விடுத்ததால், வாகீசரை திருநாவுக்கரசராகப் பிறக்கும்படி ஈசன் திருவருள் புரிந்தார் என வரலாறு செப்புகிறது.

சிவபெருமான் தமது உருவைக் கண்ணாடியில் கண்டு தமது அழகெல்லாம் சேர்ந்து ஒருருக் கொண்டு வரவேண்டும் எனப் படைத்த உருவம்தான் சுந்தரமூர்த்தி நாயனார் எனச் சொல்வார் பேரூர்ப் புராண ஆசிரியர் -

தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்துத் தோன்றிய ஆலகால விஷத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு சிறு உருண்டையாக்கி இறைவனிடம் அளித்ததால் - ஆலால சுந்தரர் என ஒரு பெயரும் உண்டாயிற்று என்பர்.

திருஉத்தரகோச மங்கைப் புராணத்திலே மணிவாசகப் பெருமானின் முற்பிறவி வரலாறு கூறப் பெற்றிருக்கிறது.

சிவபெருமானை நோக்கி ஆயிரம் வேதியர் தவமிருந்தனர். அப்போது அங்கே ஈசன் தோன்றி ''சிவாகம நூலைக் காத்துக் கொண்டிருங்கள் - இலங்கையில் - இராவணனின் மனைவி மண்டோதரி என்னை நோக்கிக் கடுந்தவம் புரிகிறாள் - அவளுக்கு அருள் புரிய வேண்டும்'' என்றார்.

''எம்பெருமானே தங்களது அருமை பெருமை




தெய்வச் சேக்கிழார் விழா 29-5-03 அன்று குன்றத்தூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம், ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், ''திருமுறைக் களஞ்சியம்'' பிரபாசுர மூர்த்தி, கலைமாமணி கவிஞர் கே.பி. அறிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

---

புரியாமல் அந்த அரக்கன் தங்களுக்குத் துன்பமிழைத்து விட்டால்?'' என்றனர் அடியார்கள்.

''அப்படி ஏதும் நேராது!.. ஏதேனும் நேரும் பட்சத்தில் - இந்தக் குளத்தின் நடுவே ஒரு ஜோதி அக்னிப் பிழம்பு தோன்றும்'' என்று கூறி மறைந்தார் சிவபெருமான்.

இலங்கையில் - மண்டோதரியின் எதிரே - மாற்று உருவில் இறைவன் தோன்றினார்.

எதிர்பாராமல் அங்கே வந்த இராவணன், ஈசனை யார் என்று தெரியாமல் - சினமடைந்து - இறுக்க கட்டிப் பிடித்தான்.

இங்கே உத்தரகோச மங்கையில் - குளத்தில் அக்னி எழுந்தது. இதுகண்ட வேதியர்கள், இறைவனுக்கு ஆபத்து என அலறியவாறு தீயில் இறங்கி விட்டனர்.

ஒரே ஒரு வேதியர் மட்டும் நூலைக் காப்பாற்றும்படியல்லவா ஈசன் கட்டளையிட்டார்! எனக் குழம்பியவாறு நூலை அணைத்தபடி நின்றார். ஈசன் அப்போது அங்கே தோன்றி ''ஆகமத்தைக் காப்பாற்றிய உங்களது பக்தியை மெச்சுகிறோம். சிவாகமப் பொருளை தோத்திர வடிவில் பாடி பூவுலகில் பக்தியைப் பரப்பி மீண்டும் நம்மை வந்து அடைவீராக!.. பூவுலகில் உமது நாமம் மாணிக்க வாசகராக விளங்கும்'' என்றார். அவ்விதமே மாணிக்கவாசகர் திருவாசகம் பாடி சைவத்துக்கு பெருமை சேர்த்தார். உத்தரகோச மங்கை திருக்குளம் அக்னி தீர்த்தம் என்ற பெயரில் விளங்குகிறது என உத்தரகோச மங்கை புராணம் கூறுகிறது.

★ ★ ★

# மாணிக்க வாசகர் மகிமை

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்

கடவுளின் திருக்காட்சி கண்டு பாடிய முதல் அருளாளர் மாணிக்க வாசகர். மாணிக்க வாசகருக்கு முன்பு பக்திப்பாடல்கள் பாடிய பக்திப் புலவர்கள் இருந்தனரே தவிர கடவுளை நேரில் கண்டு பாடிய அருளாளர்கள் யாரும் இல்லை. கடவுளைக் கண்ட வர்கள் யாரும் தங்களது அனுபவத்தை எடுத்துச் சொல்லிப் பாடியதில்லை. இதனையே "கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்" என்ற பழமொழியும் உணர்த்துகின்றது. கடவுளை நேரில் கண்டு அந்த தெய்வீக அனுபவத்தை எடுத்துச் சொல்லிப் பாடிய முதல் தெய்வீகப் புலவர் மாணிக்கவாசகர். "அருங் கவி வாதவூரனே முதலானோர்" என்று சிவப்பிரகாசர் இதைப் போற்றுகின்றார். அருள் அனுபவத்தை எடுத்துச்சொல்லும் முதல் இலக்கியமும் திருவாசகமே. திரு வாசகத்தின் ஒவ்வொரு பதிகமும் சிவப் பரம் பொருளுடன் மாணிக்கவாசகர் பெற்ற அனுபவத்தை, தெய்வீக வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துரைக் கின்றது.

நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல்
அல்லால்
கேட்டறியோம் உனைக்கண்டு அறிவாரை

என்ற திருப்பள்ளியெழுச்சித் தொடர்களிலே இறை வனை நேரில் கண்டு பாடிய புலவர்கள் யாரையும் கேள்விப்பட்டது கூடக் கிடையாது என்று மாணிக்க வாசகர் மிக அருமையாக உரைத்துள்ளார்.

பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
(திருவாசகம்)

என இன்னது என்று சுட்டிக் கூறமுடியாமல் எல்லா மாக விளங்கும் ஈசனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த மாணிக்கவாசகரின் தெய்வீக வரலாறு முழுவதும் திருவாசகத்திலே உள்ளது.

பரம்பொருளின் அருள் ஆணையால் நந்தி தேவர் அந்தணர்குலத்தில் அவதாரம் செய்தார்.

"உமை பாகம் அதாய் என்மெய் நாள் தொறும் பிரியா
வினைக்கேடா, நீக்கி முன் எனைத் தன்னொடு நிலா
வகைக்
குரம்பையில் புகப்பெய்து"

என்று மாணிக்க வாசகர் இதைக் கூறினார். திருநாவுக் கரசரும் "குடமுழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார்" என்று பாடியுள்ளார். பற்றில்லாத துறவி போன்று வாழ்ந்த மாணிக்க வாசகர் பாண்டிய நாட்டின் சேனாதிபதியாகவும் திருவாதவூரின் மன்னனாகவும் விளங்கினார். இந்த வாழ்க்கையை

சாமாறே விரைகின்றேன்
இரும்பின் பாவையனைய நான்
வானேயும் பெறல் வேண்டேன் மண்ணாள்வான்
மதித்தும் இரேன்

என்று மாணிக்க வாசகர் கூறியுள்ளார். மாணிக்க வாசகர் குதிரைகள் வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறை யில் சிவகணங்களோடு சோலையில் அந்தணனாக இருந்த பரமேஸ்வரன் மாணிக்க வாசகரைத் தடுத்து நிறுத்தி தட்சிணாமூர்த்தியாய் உண்மை வடிவைக் காட்டி ஓங்காரம் உபதேசித்து ஆட்கொண்டு மறைந் தார். மெய்த்தவ வாசகர் மானிடப் பிறவி நினைவை முற்றிலும் இழந்து நந்தி தேவராக நின்றார். உடன் சென்றவர்கள் வாதவூர் வேந்தனுக்குச் சித்தம் கலங்கி விட்டது என்று முடிவு செய்தனர். பரிகளுக்கான பொன்னைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு மதுரை சென்று தெய்வ வாசகர் மேல் களங்கம் கற்பித்துப் பழி சுமத்தினர். இந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளை எல்லாம் மாணிக்க வாசகர்

குருபரனாகி அருளிய பெருமை
வழி நின்று நின் அருளாரமுது ஊட்ட
ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு
அருளியவாறு
எனை நான் என்பது அறியேன்
பித்தன் என்று எனை உலகவர் பகர்வது
தகைவிலாப் பழியும் அஞ்சேன்
தில்லை வாழ்த்துநர் போல் தூயன்

என்று அருமையாக உரைத்துள்ளார்.

பரமசிவம் நந்திதேவரின் வேண்டுதலுக்கு ஏற்ப மீண்டும் உமையோடு வெளிப்பட்டுத் தழல் நடுவே காட்சி தந்தார். அடியார் வடிவில் இருந்த சிவ கணங்களையெல்லாம் ஜோதியில் புகுந்து சிவலோகம்

சேருமாறு கூறி மாணிக்க வாசகரை மட்டும் மண்ணுலகிலேயே வாழுமாறு பணித்தார். ஈசனது பிரிவைப் பொறுக்க முடியாமல் தன்னையும் அழைத்துக் கொள்ளுமாறு வேண்டி முறையிட்ட பெருந்துறைப் பிள்ளைக்கு முக்கண்ணன் மீண்டும் காட்சி தந்தார். அந்தண உருவுடன் திருவடிச்சுவடிகளைப் பொதிந்து வைத்துக் கோயில் கொண்டார். நந்தி வாசகரின் முடி மீதும் திருவடிச் சுவடுகளைப் பதித்து வைத்தார். செல்லும் இடமெல்லாம் வெளிப்பட்டுக் காட்சி தந்து உடன் இருப்பதாக அருளிச் செய்தார். அப்பொழுது வந்த பாண்டியனது ஓலைக்கு மறுமொழி தந்த பராபரன் மறைந்தருளியபோது மாசில்லா வாசகர் மானிட நினைவை மீண்டும் பெற்றார்.

இந்த அற்புதமான அதிசய அனுபவங்களையெல்லாம்

வெளிப்பட்டாய் என்ன வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்
அருள்செய் அன்பரும் நீயும் அங்கு எழுந்தருளி
இங்கு எனை இருத்தினாய் முறையோ
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்து அருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்
புகுந்து எல்லே பெருந்துறையில் உறை பெம்மான்
பூவார் அடிச்சுவடு என் தலைமேல் பொறித்தலுமே
பெய் கழலடி காட்டிப் பிரியேன் என்று அருளிய அருள்
மன் கோபமும் காட்டி வரும் இன்று ஓர் திருமுகமே
அடியேன் இடர்களைந்த ஆரமுதே.
குதிரையின் மேல் வந்து கூடிடும்
அவமே பிறந்த அருவினையேன்

என்று அழகாகப் பாடியுள்ளார்.

ஓங்கார வாசகர் எத்தனை முறை எடுத்துச் சொன்னபோதும் உண்மையை உணராத பாண்டியன் அவர் மீது வீண்பழி சுமத்தி மரண தண்டனை விதித்தான். வாதவூர் வள்ளலை வைகையருகே வளைத்து வைத்து ஊர்மக்களால் கல்லெறிந்து கொல்லப்படுவதற்கு ஆணையிட்டான். எந்தச் சூழ்நிலையிலும் பரம்பொருளைத் தவிர வேறு யாரையும் பாடாத தொண்டில் தலைசிறந்து நின்ற பொய்யடிமையில்லாத புலவருக்காகக் கங்காதரன் மழை பொழிவித்து வெள்ளம் பெருக்கினான். வைகைக்கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் பாய்ந்தது. எண்ணற்ற சித்திகள் பெற்ற சித்தி வாசகர் வெள்ளத்தைக் கரையோடு நிற்குமாறு செய்து ஊரைக் காப்பாற்றினார். முத்தமிழ் வாசகருக்குக் காட்சி தந்த சர்வேஸ்வரன் கொற்றாளாக வந்து மண்சுமந்து அங்கு இருந்தான். பாண்டியனால் செம்மையாக மொத்துண்ட கொற்றாள் புண்பட்ட மேனியுடன் எஞ்சிய கரையையும் கட்டி முடித்தான். பாண்டியன் மாணிக்க ஐயரைக் காட்டில் கட்டிப் போடுமாறு ஆணையிட்டான். உலக முதல்வன் வேடுவனாக வந்து உத்தமவாசகருடன் இருந்தான். அப்போது அங்கிருந்த நரிகளையெல்லாம் குதிரைகள் ஆக்கினான். மறுநாள் மாணிக்கவாசகர் ஆயுதங்களால் தாக்கப்பட்ட போது அகிலாண்டேஸ்வரன் போர்வீரனாக வந்து உடன் இருந்தான். குறித்த ஆவணி மூலம் வந்ததும் பரிமேல் அழகனாகிப் பரிகளோடு வந்தான். பாண்டியன் அளித்த பொன்முடிப்பை வாங்க மறுத்த உலகேஸ்வரன் குதிரைகளைப் பாண்டியனிடம் ஒப்படைத்தான். பாண்டியன் கைக்கொண்டவுடனேயே பரிகள் யாவும் மாயமாக மறைந்தன. பரிச் சேவகர்களும் மறைந்தனர். நடந்த உண்மையெல்லாம் உரைத்து எல்லோருக்கும் இன்பம் வழங்கிய வாகீஸ்வரன் ஜோதி ஒன்றைத் தோற்றுவித்தான். அதில் அடியவர்களைப் புகுவித்த பின் தில்லைக்கு வருமாறு மாணிக்க வாசகரிடம் கூறி மறைந்தான். அந்தணர்களையும் அடியவர்களையும் போற்றும் தமிழ் மரபிற்கு முற்றிலும் மாறாகச் சென்று தான் செய்த கொடுமைகளுக்கு எல்லாம் பாண்டியன் அன்பு வாசகரிடம் மன்னிப்பு கோரினான். புண்ணிய வாசகருக்காகப் பரமசிவம் திருவடி பதித்து எழுந்தருளிய இடத்தில் கோயில் கட்டி சிறப்புப் பூசைகளும் தோத்திர விழாக்களும் நடத்தினான். இதுவே திருப்பெருந்துறை ஆவுடையார்க் கோயில். இந்த வரலாற்று உண்மையை எல்லாம் மாணிக்க வாசகர்

சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய்காண்
தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
எண்ணிலரிய சித்திகள் எனை வந்து எய்துவது
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி
காப்பகத்து வேடன்
இரவில் நின் ஆரருளே
நரிகளைக் குதிரை ஆக்கிய நன்மையும்
கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
ஒற்றைத் திறல் சேவகனே
பரிமிசை வந்த வள்ளல்
ஈண்டு கனகம் இசையப் பெருது ஆண்டான்

மாயவனப்பரி மேற்கொண்டு மற்றவர்
கைக்கொளலும்
போய் அறும்
நாடு அறியத் தான் இங்ஙன் சொற்பாலதானவா
அழுக்கு அடையாமல் ஆண்டுகொண்டு அருள்பவன்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
பார் இன்ப, வெள்ளம் கொள்ளப் பரிமேற் கொண்ட
பாண்டியனார்
பந்தம் பறியப் பரிமேற் கொண்டான் தந்த
அந்தமில்லா ஆனந்தம் கோலமார் தரு
பொதுவினில்
வருக என ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி
பாண்டியற்கு ஆறமுதாம் ஒருவரை
தேரானந்த வீதிப் பெருந்துறையான்
தீப்பார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்

என்று மாணிக்கவாசகர் மிக அருமையாகப் பாடியுள்ளார்.

தூயவாசகர் திருவாதவூர் சென்று தொழுத போது தில்லைப் பெருமான் காட்சி தந்து சிலம்பொலி கேட்பித்தான். புனித வாசகரின் இல்லத்திற்கு அடியார் கோலத்தில் எழுந்தருளி அவரது குடும்பம் முழுவதற்கும் காட்சி கொடுத்து அருளினான். திருப்பெருந்துறையில் அன்பு வாசகரின் சுற்றம் முழுவதற்கும் முக்தி அருளினான். அருள்வாசகர் சென்று வழிபட்ட தலங்களில் எல்லாம் தவறாமல் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்த கயிலைநாதன் திருவண்ணாமலையில் காட்சி கொடுக்காமல் மறைந்து இருந்தான். பக்தி வாசகர் தொழுது வேண்டிப் பாடியபோது ஆதியண்ணாமலையார் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தார். அருட்பெருஞ் சோதியான் அருள் ஆணைப்படி அருமை வாசகர் உண்ணாமுலையம்மனிடம் தூது சென்றார். ஆளுடைய அடிகளின் இன்னிசைப் பாடலுக்கு அம்பிகை இசைந்தாள். திருவூடல் தீர்ந்த அம்மனுடன் அண்ணாமலையார் இணைந்து மாணிக்க வாசகருக்கு அர்த்த சக்தீஸ்வரனாகக் காட்சி கொடுத்தார். ஆதியண்ணாமலையார் மாணிக்க வாசகருக்குக் காட்சி கொடுத்த இடத்தில் கட்டப்பட்ட கோயிலே ஒன்பது கோபுரங்களுடன் அருணாச்சலேஸ்வரன் கோயிலாகப் புகழ் பெற்றுள்ளது.

வாதவூரினில் வந்து இனிது அருளி
பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும்
வந்து எம் இல் புகுந்து எமையாளும் கொண்டு
எம் பணி கொள்வான் வைத்த மாமலர்ச் சேவடி
குடிமுழுது ஆண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே
மறவி வேர் அறுத்து என்குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா
காணொனாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்
மறைக்கின் என்னைக் கண்டால் இயலும் கடன்
இல்லை
உலகெலாம் தேடியும் காணேன்
அண்ணாமலையான் .... கண்ணார வந்து நின்றான்
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணாரமுதக்
கடலே போற்றி
எம்பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த மடு

என்று தெய்வீக அனுபவங்களையெல்லாம், இறைவனது மாப்பெருங் கருணையை எல்லாம் மாணிக்க வாசகர் உருகிப் போற்றியுள்ளார்.

அமுத வாசகர் சிதம்பரம் சென்று தொழுதார். காட்சி தந்த ஆடல்நாயகனிடம் தன்னை அழைத்துக் கொள்ளுமாறு வேண்டிப் பாடினார். ஒரு நாள் தானே நேர் வந்து முக்தியளிப்பதாகவும் அதுவரையிலும் தில்லையிலேயே தங்கியிருக்குமாறும் தயாசாகரன் பணித்தருளினார்.

சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம்
அணிகொள தில்லை கண்டேனே
இறப்பதனுக்கு என் கடவேன்
உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருள்
போற்றி
சங்கம் தரு முத்தி யாம் பெற தில்லை வானவன்
நேர் வருமே

என்று இதனை மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

வடநாட்டிலே அசோக மன்னன் பௌத்தனாக மதம் மாற்றப்பட்ட பின்பு உலகம் எங்கும் பலநாடுகளுக்கும் பௌத்த குருமார்களை அனுப்பிச் சமயப் படையெடுப்பு நிகழ்த்தினான். அத்தகைய ஒரு கூட்டம் தமிழகத்திற்கு வந்தது. தென்னகத்தின் அற்புதமாக விளங்கும் சிதம்பரம் பொற்கோயிலை முற்றுகையிட்டது. கண்கலங்கித் தொழுத தில்லைவாழ் அந்தணர்களின் கனவில் தோன்றிய ஐந்தொழில் நாயகன் மாணிக்க வாசகரை வரவழைத்து துன்பம் நீங்குமாறு அருளிச் செய்தான்.

பொற்கோயிலைப் பௌத்த விகாரமாக்குவதற்கு வந்த பௌத்த குரு பரம்பொருளின் பல்வேறு கோலங்களையும் தாக்கிப்பழித்தான். மதுர வாசகர் மௌன நாயகனான தட்சிணாமூர்த்தியைத் தொழுது

பௌத்த குருவை ஊமையாக்கினார். பௌத்தர்கள் திகைத்து நின்ற போது மாணிக்கவாசகர் இயக்கநாத னான நடராஜப் பெருமானைத் தொழுது மீண்டும் பேச்சாற்றல் அளித்தார். கடவுளின் மகிமை உணர்ந்த பௌத்தர்கள் மனிதனை வழிபடும் மடமை நீங்கி அம்பலவனைப் பணிந்து பக்தர்கள் ஆனார்கள். தங்க ளுக்கு நன்னெறி காட்டியருளிய கருணை வாசகரைப் போற்றிப் பணிந்தனர்.

புத்தன் முதலிய புல்லறிவில்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
ஏழேழ் பொழில் எழில் குன்றும் அன்றும்
நடுங்காதவனை நடுங்க .... மேவும் கொலாம்தில்லை
இது என்ன தவம்? நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேல் காதலித்தான்
என்ன பாவம் சொல்லாடல் செய்யான் பாவி
அம்பலவன் அருட்கழல்கள் சித்தம் புகுந்தவா
ஆலாலம் ஆரமுது எம்பெருமான் உண்ட சதுர்
எனக்கு அறிய இயம்பு
பேதை குணம் ஆகாமே தீர்த்தாய் திகழ் தில்லை
அம்பலத்தே கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம்

என்று இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மாணிக்க வாசகர் எடுத்துப் போற்றியுள்ளார்.

நாட்டிய நாயகன் அடியவர் கோலத்தில் ஒரு நாள் மாணிக்க வாசகரிடம் சென்றான். அரிய வாசகர் அருளிய திருப்பதிகங்களையெல்லாம் கேட்டு எழுதி னான். இனிய வாசகர் சிவபுராணம் என்னும் பதிகத்தை இறுதியாகப் பாடி முடித்தார். அடியவர் பரமசிவனாக வடிவைக் காட்டி கோவை பாடச் சொல்லி எழுதினார். எழுதி முடித்த அன்பர் பரமேஸ்வரனாகக் காட்சி கொடுத்தார். அற்புத வாசகரது மானிட உடல் மறைய அவர் நந்தி தேவரானார். பொன்னம்பலேசன் நந்தியுடன் அம்பலத்தில் மறைந்தார். கனக சபையில் ஏட்டினைக் கண்ட தில்லை வாழ் அந்தணர்கள் இறைவன் அருளை யும் பெருந்துறை வாசகரின் பெருமையையும் போற்றி னர். அதிசய வாசகர் அருளிய திருமுறைகள் திருவாசகம் என்றும் திருக்கோவையார் என்றும் புகழ்பெற்றன.

பண்டைக் காலத் தமிழ் எழுத்துகள் ஐம்பத் தொன்றைக் குறிக்கும் வகையில் திருவாசகம் ஐம்பத் தொரு பதிகங்களைக் கொண்டுள்ளது.

அன்பர் சொற்பா விரும்பினர்
இருந் துதி என்வயின் கொண்டவன்
என் பிறவி கெட்டு இன்று அழிகின்றதாக்கிய
தாள் அம்பலவன்

விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே

என்று மாணிக்க வாசகர் இறைவன் ஏடு எழுதிச் சென்று முக்தியளித்த முறையைப் பாடியுள்ளார். பக்தி என்றால் என்ன? பக்தர் என்பவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் மாணிக்க வாசகர்.

மாணிக்க வாசகர் மிகச்சிறிய வயதிலே ஆட் கொள்ளப்பட்டு மிகச் சிறிய வயதிலேயே முக்தி யடைந்தவர். பலமுறையும் தன்னைச் சிறியேன் சிறியேன் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். பிற ஜீவ ராசிகளுடன் தன்னை ஒப்பிட்டுக் கூறும்போது கூட சிறுநாய், சிறுமீன், கன்று, பார்ப்பு என இளமைப் பருவத்தையே குறிப்பிடுகின்றார். எனவே மாணிக்க வாசகரும் சுந்தரரைப் போன்று மிக இளம் வயதில், ஆட்கொள்ளப்பட்டு மிக இளம் வயதிலே முக்தியும் பெற்றவர்.

தான் நந்திதேவர் என்பதை உணர்ந்த நொடி யிலிருந்து இறைவனைப் பிரிந்து இவ்வுலகில் வாழ முடியாமல் உன்பால் என்னை அழைத்துக் கொள்வா யாக என்ற வேண்டுகோள், உண்டு உடுத்து இவ்வுல கில் இருப்பாயாக. என்ற பரமனது ஆணையினால் உண்டான வருத்தம், வாழ்வை முடித்து பரம் பொருளைச் சென்று சேரமுடியவில்லையே என்ற ஏக்கம், ஆட்கொள்ள வந்த அந்தணன் சிவபெருமான் என்று அறியாததால் அன்பில்லாமல் மறுத்துப் பேசி வன்மையாக நடந்து கொண்ட தன்மைக்குத் தன்னையே பலவாறாகப் பழித்து இகழ்ந்து கொள்ளும் மனவருத்தம் ஆகியவற்றோடு பாடப்பட்ட பிரிவுத் துயர்ப் பதிகங்கள் பலப்பல. நெஞ்சை உருக்கும் இத்தகைய அனுபவப் பதிகங்களால் திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத் திற்கும் உருகார் என்ற பழமொழி உண்டாயிற்று.

அறுகு எடுப்பார் அயனும் அரியும் அன்றி மற்று
இந்திரனோடு அமரர் நறுமுறு தேவர்கணங்கள்
எல்லாம்
நம்மிற் பின்பல்லது எடுக்க ஒப்போம்.
உமை பாகம் அதாய் என் மெய்நாள்தொறும்
பிரியா
வினைக் கேடா
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவி கண் என்று
இவை நின்கணே வைத்து மன்னிக்க மேல் அடியேன்
வாழ்கிலேன்
உனைப் பிரிந்து இங்கு ஒரு பொழுதும் தரியேன்

எனப் பிரம்மன் விஷ்ணு இந்திரன், தேவர், கணங்

களுக்கு எல்லாம் முன்பாக அறுகம் புல் எடுத்து சிவபூஜை செய்யும் முதல் உரிமையையும், பார்வதி பரமேஸ்வரரை நாளும் மேனியில் தாங்கி நிற்கும் அரிய திருத்தொண்டினையும இழந்து ஈசனைப் பிரிந்து இந்த மண்ணுலகில் வாழ முடியாமல் தவித்தவர் மாணிக்கவாசகர். இந்தப் பிரிவுத் துயரத்தால் தோன்றியவையே கல்லையும் கசிவிக்கும் திருவாசகப் பாடல்கள். சிந்தனை, சொல், உடல் உறுப்புகள் எல்லாவற்றையும் பரம்பொருளுக்கு ஆக்கி பரப்பிரம்மத்தைப் பிரிந்து இவ்வுலகில் ஒரு கணப் பொழுதும் இருக்க முடியாமல் துடித்தார். இதனால்

"எஞ்ஞான்று கொல் சாவதுவே
எனைச் செத்திடப் பணியாய்"

எனச் சாவை வேண்டினார்.

பல்லாண்டுகள் வாழ்விப்பாயாக என்று இறைவனை வேண்டுகின்ற உலகிலே வீடும் வேண்டாமல் சாவை வேண்டிய வெண் திறல் யோகியாய் வாழ்ந்த அதிசயப் பிறவி மாணிக்க வாசகர். மாணிக்க வாசகரின் பிரிவுத் துயரத்தைக் குறைப்பதற்காகவே அவரது வாழ்நாள் முழுவதும் பரமசிவம் பலப்பல கோலங்களில் பலப்பல முறையும் தலம்தோறும் வெளிப்பட்டுக் காட்சி தந்து ஓங்காரம் உணர்த்தி, எண்ணற்ற சித்திகளை அருளி, எப்போதும் உடன் இருந்து பேரருள் புரிந்தார். பராபரனின் இந்த மாப் பெருங்கருணைக்கு மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி இன்பக் கடலில் நீந்தி பாடப்பட்ட வரலாற்றுப் பதிகங்களால் திருவாசகம் திருவாசகத் தேன் என்று புகழ் பெற்றது.

மாணிக்க வாசகர் நந்தி தேவர், ஓங்காரம் உணர்ந்தவர், ஆதலால் உலக ரகசியங்கள் அனைத்தும் அறிந்தவர். எனவே அவருடைய பாடல்களில் மனிதர், தேவர், தெய்வம் என எல்லோருக்கும் அப்பாற்பட்ட கடவுளின் இயல்புகளும் மகிமையும் தன்மையும் மாப்பெருங்கருணையும் மேலோங்கி நிற்கின்றன. கடவுளைப் பற்றிய உண்மைகளையெல்லாம் மிக எளிமையான அழகிய மொழியால் எடுத்துரைக்கும் அருமையான அற்புத நூலாகத் திருவாசகம் திகழ்கின்றது. கடவுள் என்றால் என்ன, கடவுளுக்கும் மற்றவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன, வேறுபாடு என்ன என்பதையெல்லாம் உரைக்கும் அரிய நூல் திருவாசகம். இதனாலேயே திருவாசகத்தைக் கேட்கும்போது பறவைகளும் மிருகங்களும் கூட விருப்பத்துடன் மெய்ஞானப் பாதையில் செல்லும் என்று வள்ளலார் இராமலிங்க அடிகள் போற்றினார். திருவாசகம் வேத ஆகமங்களைவிடச் சிறந்தது ஆதலால் திருவாசகம் ஓதுபவர்களுக்கு மீண்டும் பிறப்பு இல்லை சிவபெருமான் தானே வந்து முக்தி அளித்திடுவான் என்று சிவப்பிரகாசர் போற்றினார்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
.... நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன

என பூமிமட்டுமன்று கோடிக்கணக்காக உள்ள அனைத்து உலகங்களும் உருண்டையானவே, தாவரம், கல்(மலை) ஆகியவற்றுக்கும் உயிர் உண்டு. அவையெல்லாம் நகராமல் ஒரே இடத்தில் நிற்கும் பிறவிகள், அணு பற்றிய உண்மைகள் போன்று விஞ்ஞானம், மருத்துவம், விளையாடல், அன்னவரே எம் கணவர் ஆவார் என கணவன் என்றால் இப்படிப் பட்டவனாகத் தான் இருக்க வேண்டும் என்று கூறும் பெண்ணுரிமை போன்ற பலவும் திருவாசகத்தில் உரைக்கப்படுவதால், திருவாசகம் அனைத்துத் துறையினருக்கும் வழிகாட்டும் ஒரு அற்புதக் கலங்கரை விளக்கமாக ஒளிவிடுகின்றது. பெண்களின் உடல் அழகை மட்டுமே வர்ணிக்கின்ற உலகிலே

சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை

எனப் பெண்களின் சிந்தனையால் அழகைக் கண்ட அரிய புலவர் மாணிக்க வாசகர் ஆள்பவர்களின் விருப்பத்திற்காகவோ சமுதாயத்தின் போக்கில் சென்று பொருளுக்காகவும் புகழுக்காகவும் எதைப் பற்றியும் எப்படி வேண்டுமானாலும் பாடாமல் காத்தலும் பெற நாத்திகம் பேசிய சமுதாயத்திற்கு நல்வழி காட்டி உண்மையையும் நன்மையையும் அனுபவத்தையும் எடுத்துச் சொல்லிப் பாடிய முதல் புலவர் மாணிக்க வாசகர். பொதுமக்கள் எல்லோருக்கும் புரியும் வகையில் பாடப்பட்ட முதல் பொதுமக்கள் நூல் திருவாசகம். இதனால் நாட்டுப்புறப் பாடல்கள், விஞ்ஞானம், விளையாடல், தொழில் எல்லாம் திருவாசகத்தில் செந்தமிழ்ப் பதிகங்களாகியுள்ளன. நாம் ஆர்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம் என்று மக்களாட்சிக்கு வித்திட்டவர் மாணிக்க வாசகர். சங்க இலக்கியமான கல்லாடம், சங்க காலத்துப் பத்துப் பாட்டு எட்டுத்தொகை நூல்கள், தேவாரம் முதலாகக் காலந் தோறும் தொடர்ந்து எல்லோராலும் மாணிக்க வாசகரும் அவருடைய நூல்களும்போற்றப்பட்டுள்ளன. திருவாசகமும் மாணிக்க வாசகரும் போற்றப் பட்ட அளவிற்கு வேறு எந்த நூலும் வேறு எந்த அடியாரும் போற்றப்படவில்லை.

திருவாசகம் நந்தி தேவரின் அவதாரமான மாணிக்க வாசகரால் அருளிச் செய்யப்பட்ட காரணத்தால் பிரதோஷ காலங்களில் திருவாசகத்தை ஓதுவது பலப்பல மடங்கு புண்ணியப் பலனைத் தருகின்றது.

★★★

# கண்ணகியும் மாரியம்மனும்

- டாக்டர் டி. செல்வராஜ்

''பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்''
(சிலம்பு, காட்சிக்காதை 114)

'பத்தினிக் கடவுளான கண்ணகியை அனைவரும் வழிபட வேண்டும்' என்பது சேரன் செங்குட்டுவனின் கூற்று. இளங்கோவடிகளின் ஆணை.

கர்ணிகா = தாமரைப் பொகுட்டில் வீற்றிருக்கின்ற இலக்குமி; செங்கமல வல்லி. கர்ணிகா என்ற பெயர் கண்ணகி என்று திரிந்தது. பத்தினிக்கடவுள், வீரபத்தினி, திருமாபத்தினி, திருமாமணி முதலிய பல பெயர்கள் கண்ணகியைக் குறிக்கின்றன.

கண்ணகி மனித குலத்தில் பிறந்தாள்; தெய்வத் தன்மையுடையவளாக உயர்ந்தாள்; அவளைப் பத்தினிக் கடவுளாக அனைவரும் வழிபடலாயினர்.

## கண்ணகி - பத்தினிக்கடவுள்

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மாநாய்க்கனின் மகள் கண்ணகி. இவள் மாசாத்துவானின் மகன் கோவலனை மணந்தாள். சில காலம் கடந்தது.

கோவலன் மாதவியை இணைந்தான். கணவனைப் பிரிந்த கண்ணகி மிகவும் துன்பமுற்றாள்.

ஒரு நாள் மாதவியைப் பிரிந்த கோவலன், கண்ணகியிடம் மீண்டும் வந்தான். கண்ணகியின் காற்சிலம்பை விற்றுப் புதுவாழ்வு தொடங்க இருவரும் மதுரை மாநகருக்குச் சென்றனர். அங்கே பொற்கொல்லனின் வஞ்சனையால் கோவலன் கொலைக்களப் பட்டான்.

கண்ணகி பாண்டியனின் முன் வழக்குரைத்தாள். கோவலன் கள்வன் அல்லன் என்று நிலை நாட்டினாள். அறம் சிதைந்தது; செங்கோல் வளைந்தது. பாண்டியன் உயிர் நீத்தான்; கோப்பெருந்தேவியும் மடிந்தாள். அப்போதும் கண்ணகியின் ஆவேச வெறியும் சினமும் தணியவில்லை. மதுரை மாநகரை எரித்தாள். அங்கிருந்து புறப்பட்டாள்.

கண்ணகி சேர நாட்டிற்குச் சென்றாள். ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள். கோவலன் புட்பக விமானத்தில் வானோர்களுடன் வந்து அவளை அழைத்துச் சென்றான்.

மேற்கண்ட வரலாற்றைச் சேரன் செங்குட்டுவன் கேட்டறிந்து வியந்தான். தனது நாடு புகுந்து தெய்வ நிலைக்கு உயர்ந்த ''பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்'' என்று முடிவெடுத்தான். இமைய மலையிலிருந்து கல்லைக் கொணர்ந்து, கண்ணகியின் திருமேனியை வடித்து, வஞ்சிமாநகரில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் அத்திருமேனியைப் பிரதிட்டை செய்தான். வழிபட்டான்.

சேர நாட்டில், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு முதன்முதல் கோயிலை அமைத்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்போது முதல் பத்தினிக்கடவுள் வழிபாடு தமிழகமெங்கும் ப்ரவியது.

## சேர நாட்டில் பத்தினிக்கடவுள் வழிபாடு

கேரளத்தில், பகவதி அம்மனின் அவதாரமாகக் கண்ணகியை வழிபடுகின்றனர். பகவதி அம்மனின் கோயில்களுடன் கண்ணகியின் வரலாற்றைத் தொடர்பு படுத்துகின்றனர். சில எடுத்துக் காட்டுகள் வருமாறு;-

### 1. செங்கன்னூர் பகவதியம்மன்

மாவேலிக்கரையிலிருந்து வடகிழக்கே 24 கி.மீ. தூரத்திலும், கோட்டயத்திலிருந்து தெற்கே 33 கி.மீ. தூரத்திலும் செங்குன்றூர் உள்ளது. செங்குன்றூர் என்ற பெயர் செங்கன்றூர் என மாறி, செங்கன்னூர் என மருவியது.

கண்ணகி மதுரையை எரித்த பின்னர்ச் செங்கன்னூர் வந்தாள்; தவம் புரிந்தாள்; புட்பக விமானத்தில் ஏறி விண்ணுலகடைந்தாள்.

சேரன் செங்குட்டுவன் செங்கன்னூரில் ஒரு கோயிலைக் கட்டி, செங்கமல வல்லி என்ற பெயருடன் பத்தினிக் கடவுளின் சிலையை நிலைநாட்டினான். இவளே செங்கன்னூர் பகவதி அம்மன் என்று பலர் கருதுகின்றனர்.

## 2. ஆற்றுக்கால் பகவதி அம்மன்

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த மணக்காடு என்ற பகுதியில் ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயில் இருக்கிறது. புராண மரபின்படி இக்கோயிலும் கண்ணகியின் வரலாற்றுடன் தொடர்புடையது.

மதுரையை எரித்து ஆவேசத்துடன் வந்த கண்ணகி இக்கோயிலின் மண்டபத்தில் சற்று நேரம் தங்கி ஓய்வெடுத்துச் சினம் தணிந்தாளாம்.

கோயிலில் கண்ணகியின் வரலாற்றை விளக்கும் சுதைச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட நாளில் பெண்கள் பெருந் திரளாகத் திரண்டு, பொங்கலைப் பொங்கிப் படைத்து அம்மனை வழிபடுகின்றனர்.

## 3. சித்தூர் பகவதி

பாலக்காட்டுச் சித்தூரிலும் கண்ணகியைப் பகவதி அம்மனாகக் கருதி வழிபடுகின்றனர். இக் கோயிலுக்கு ஆண்கள் போவதில்லை.

***கண்ணகியுடன் மாரியம்மனும் :*** கருத்துகள் பல (1) மாரியம்மன் வழிபாடு சக்தி வழிபாட்டின் ஓர் அங்கம் என்பது ஒரு கருத்து. (2) அவள் பராசக்தியின் ஓர் அம்சம் என்பது மற்றொரு கருத்து (3) கிராமப்புற மக்கள், அம்மை நோய் வராமலும், வந்தால் பரவாமலும் தடுக்க, அச்சத்தால் வழிபட்ட அவள் ஒரு சிறு தெய்வம் என்பது இன்னுமொரு கருத்து (4) கண்ணகியே மாரியம்மன் என்ற கருத்தும் ஏற்புடையதே. இக்கருத்தை நிலை நாட்டுவதற்குரிய சான்றுகள் சிலவற்றைக் காணலாம்.

## 1. மாரியம்மன்

பாண்டிய அரசன் அறநிலை பிறழ்ந்ததால் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பொழியவில்லை. பஞ்சம் நிலைத்தது. காரணம் உணர்ந்த மக்கள் கண்ணகியின் ஆவேச வெறி அடங்கச் சாந்தி வழி பாடுகளைச் செய்தனர். அவள் பேரருள் சுரந்ததால் மழை பொழிந்தது. இவ்வாறு மழையருளிய அம்மனே 'மாரியம்மன்' என்ற திருப் பெயரைப் பெற்றாள். அப்பெயர் நிலைத்து இப்போதும் வழங்குகிறது.

## 2. ஆடிமாதம்

மாரியம்மனை மிகச் சிறப்பாக வழிபடத் தகுந்த மாதம் ஆடி மாதமே.

ஆடி மாதத்தில் மதுரை எரிந்தது; கண்ணகி தெய்வ நிலைக்கு உயர்ந்தாள். எனவே இவளை ஆடிமாதத்தில் வழிபடுவதே பொருத்தம்.

## 3. தோற்றப் பொலிவு

மாரியம்மனின் தோற்றம் மிக உக்கிரமானது. பக்தியோடு வழிபடாதவரைப் பயமுறுத்துவாள். ஆவேசமான நோக்குடன் தலைமட்டுமே கருவறையில் இருக்கத் தரிசிக்கலாம். தலை தனித்திருக்க இந்த உலகமே அவளுக்கு உடம்பு. இத்தகைய தோற்றப் பொலிவு ஆவேசமான கண்ணகியை நினைவுறுத்துகிறது. ஆவேசம் அடங்கிய சாந்தமான முழுத்திரு மேனியும் இவளுக்கு உண்டு.

## 4. நிவேதனம்

கூழும், முருங்கை கீரையும் மாரியம்மனுக் குப் பிடித்தமான தலைமையான நிவேதனப் பொருள்களாம்.

பாண்டிய நாட்டைப் பஞ்சம் தாக்கிய போது, மக்கள் கூழ், முருங்கைக் கீரை முதலிய எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை உண்டனர். அவர்கள் வழிபட்ட தெய்வத்திற்கும் அவற்றையே படைத்தனர். இப்படையல் இப் போதும் தொடர்கிறது.

## 5. அம்மை நோய்

வெப்பம் நிறைந்த காலத்தில் பரவுவது வெப்பு நோய். இந்த வைசூரி என்ற அம்மை நோயை அருளுபவளும், அகற்றுபவளும் மாரியம்மனே. இவளது அருளைத் தவிர உலகில் வேறு மருந்தில்லை.

பஞ்ச காலத்தில் பரவிய அம்மை நோயைத் தனது அருளால் அழித்தவள் கண்ணகியம்மன்; மாரியம்மன்.

## 6. வேம்பு

வெப்பு நோயைத் தணிக்கும் ஆற்றல் உடையது வேம்பு. இது மாரியம்மன் கோயிலின் தலமரம்; மூலிகை மரம்.

கண்ணகியின் பூத உடம்புக்குத் தந்தை மாநாய்க்கன்; புகழுடம்புக்குத் தந்தை பாண்டியன். கண்ணகி தெய்வ நிலை எய்துவதற்கு முக்கியக் காரணமாக விளங்குபவன் இவனே. வேம்பு இவனது அடையாள மரம்.

## 7. பத்தினிப் பெண்டிர் வழிபாடு

பழந்தமிழர் பத்தினிப் பெண்டிரைத் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டனர். இத்தகைய பத்தினிப்

பெண்டிர் எழுவரது வரலாறுகள் சிலப்பதிகார வஞ்சினமாலையின் தொடக்கத்தில் (அடிகள் 1 - 35) உள்ளன.

மாரியம்மன் கோயில்களில் அண்ணன்மார் சன்னிதி என்ற பெயருடன் ஒரு தனிச் சன்னிதி இருக்கக் காணலாம் அண்ணன் = நெருங்கிய உறவுடையவன்; கணவன், இச்சொல் இதே பொருளுடன் இப்போதும் வழக்காற்றில் இருக்கிறது. பத்தினிப் பெண்டிர் எழுவரது 'கணவன்மார்களை' 'அண்ணன்மார்கள்' என்று வழிபடுகின்றனர்.

## 8. கோவலன் கதை

மாரியம்மன் கோயில்களில் திருவிழா நடைபெறுகின்றபோது, இரவு நேரங்களில், கோவலன் கதை நடிக்கப்படுகிறது; படிக்கப்படுகிறது. ''கோவிலன் கதை'' என்ற நாடோடி இலக்கியமும் ஒன்று உண்டு. இக்கதை இசைத்தட்டுகளிலும் பதிவாகிப் புகழ் மிகப் பெற்றது. மாரியம்மன் கோயில்களைத் தவிர வேறு கோயில்களில் கோவலன் கதையை நடிப்பதோ படிப்பதோ இல்லை.

## 9. சிலம்பு

மாரியம்மன் பவனியுலா வருகின்றபோது, உடுக்கை, உருமி முதலிய பல இசைக்கருவிகள் முழங்கும். அந்த இசைக்குத் தகுந்தபடி, கால்களில் சலங்கை அணிந்த, கைகளில் சிலம்புகள் ஏந்திய இருவர் சுழன்று சுழன்று நடம்புரிகின்றனர். சிலம்புடன் தொடர்புடைய ஒரே தெய்வம் கண்ணகி. இவள் ஒற்றைச்சிலம்பால் தெய்வமானவள்.

ஆகவே, கண்ணகி மாரியம்மனே என்று கருதலாம்.

திருச்சி மாவட்டம், திருவாச்சூரில் மதுர காளியம்மன் கோயில் உள்ளது. இதைக் கண்ணகிக் கோயில் என்று கூறுகின்றனர் இங்கே திங்கள் வெள்ளிக் கிழமைகளில் மட்டும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இதனால் காளியம்மன் முதலிய பல பெயர்களால் இப் போதும், எப்போதும் கண்ணகியை வழிபடுகின்றனர் என்பது புலனாகிறது.

## வேறு பெயர்கள்

மாரியம்மன் ஆயிரம் கண்களைக் கொண்டவள். அவளுக்குரிய பெயர்களும் ஓராயிரமாம். 1. கருமாரி 2. முத்துமாரி. 3. செல்லியம்மன் 4. எல்லையம்மன். 5. பவானியம்மன். 6. பொன்னியம்மன் 7. துலுக்கானத்தம்மன் (துளிர் கானத்து அம்மன்) 8. முண்டகக்கண்ணியம்மன். 9. வெங்காளம்மன். 10. அங்காளம்மன். 11. சீதளாதேவி. 12. ரேணுகா தேவி முதலியன.

## புராணக் கதைகள்

ஊருக்கொரு விநாயகர் கோயிலும், மாரியம்மன் கோயிலும் இருப்பதைக் காணலாம். மாரியம்மனின் சிறிதும், பெரிதுமான பெரும்பாலான கோயில்களில், அந்த அம்மனைப் பற்றிய பல திறப்பட்ட பழங்கதைகள் வழங்குகின்றன. பார்வதி - பரமசிவன் கதை, ரேணுகாதேவி - ஜமதக்கினி முனிவர் கதை, கண்ணகி - கோவலன் கதை முதலியன குறிக்கத்தக்கன.

சிறப்பாக அம்மை நோயைத் தணிக்கவும், பொதுவாகக் கிராம மக்களுக்குத் துணை செய்யவும் அம்மன் வீற்றிருக்கின்றாள் என்பதை அக்கதைகள் உணர்த்துகின்றன. எனவே, மாரியம்மன், கிராம மக்கள் பயந்தும், நயந்தும், வியந்தும் வழிபடுகின்ற சிறு தெய்வமாகத் திகழ்கின்றாள்.

## முதல் தனிக் கோயில்

தஞ்சாவூருக்குக் கிழக்கே ஏறக்குறைய 8 கி.மீ. தூரத்தில், மாரியம்மன் கோயில் என்ற பெயருடைய ஒரு சிற்றூரும், அதில் ஒரு கோயிலும் இருக்கின்றன. மாரியம்மனுக்காக உருவாக்கப்பட்ட முதல் தனிக் கோயில் இதுவே என்பது பலரது கருத்து. இது பிற்காலச் சோழர் காலத்தது; கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதற்குப் பிறகு மாரியம்மனுக்குரிய நூற்றுக் கணக்கான கோயில்கள் தமிழகமெங்கும் தோன்றலாயின. மேன்மேலும் புகழ் பெறலாயின.

## மாரியம்மனின் புகழ் பெற்ற கோயில்கள்

1. சமயபுர மாரியம்மன் 2. திருவேற்காடு கருமாரியம்மன் 3. சேலம், கோட்டை மாரியம்மன் 4. இருக்கன்குடி மாரியம்மன் 5. தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் 6. கோவை தண்டு மாரியம்மன் 7. மயிலை முண்டகக் கண்ணி அம்மன் 8. பெரிய பாளையத்துப் பவானி அம்மன் (ரேணுகா தேவி). 9. திருவொற்றியூர் வட்டபாறையம்மன் (கண்ணகி).

## நிறைவு

அவதாரத் தெய்வங்களையும், பத்தினித் தெய்வங்களையும் கிராம மக்கள் 'மாரியம்மன்' என்ற ஒரே பெயருடன் வழிபடுவதாகத் தோன்றுகிறது. இவர்களுள் ஒரு பத்தினித் தெய்வமே கண்ணகி.

★ ★ ★

# அநுஷ்டானத் திருப்புகழ்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

1. அதிகாலையில் நித்திரை கலைந்ததும் படுக்கையில் இருந்தபடியே கந்தர் அநுபூதியில் வரும் பாடலாகிய,

'முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ் சரனே.'

இதனை மும்முறை ஓதி, திருப்புகழ்ப் பாடல் 'மாலைதனில் வந்து' எனத் துவங்கும் பாடலின் பின் பகுதியாகிய

'காலையிலெ ழுந்துன் நாமமேமொ ழிந்து
காதலுமை மைந்த என வோதிக்
காலமும்உ ணர்ந்து ஞானவெளி கண்கள்
காணஅரு ளென்று பெறுவேனோ;'

எனும் வாக்கியத்தை கூறிப் பணிந்து எழுந்திருக்கவும்.

2. பல் துலக்கி முகம் கழுவித் திருநீறு இடும்பொழுது :-

கந்தர் அந்தாதி பாடலாகிய

''திகமு மலங்கற் கழல் பணி வார்சொற்
படிசெய்யவோ
திகமு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகமு மலங்கற் பருளுமென்வைமண் சேனையுபா
திகமு மலங்கற் குரைத்தோ னலதில்லை
தெய்வங்களே.''

இப்பாடலை ஓதி, அடுத்துத் திருப்புகழ் பாடலின் வரிகளாகிய

''ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம்''

என்று ஆறு முறைக் கூறவேண்டும். திருப்புகழ் பாடலாகிய ''ஓலையிட்ட குழைச்சிகள்'' என்ற பாடலில் கடைசி அடியாகிய

''நீற திட்டு நி னைப்பவர் புத்தியில்
நேச மெத்த அ ளித்தருள் சற்குரு
நீல முற்றதி ருத்தணி வெற்புறை பெருமாளே.''

என்று திருநீறிடும் பொழுதெல்லாம் இங்ஙனம் ஓதிடவும்.

3. குளிக்கும்பொழுது : திருப்புகழ் பாடலாகிய

''பாட்டி லுருகிலை கேட்டு முருகிலை''

என்பதில் வரும் கடைசி அடியாகிய

''தீர்த்த எதைக மேட்டை யுடனினை
ஏத்த அருளுடைய னோக்கி அருளுதி
தீர்த்த மலைநகர் காத்த சசிமகள் பெருமாளே.''

எனக் கூறி ஸ்நானம் செய்யவும். குளித்த பிறகு மேற் கூறிய 2-வது தலைப்பில் சொல்லியபடி திருநீற்று மந்திரங்களைச் சொல்லி திருநீறு இட்டு இறைவன் முன்பு

''சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்தண்டைச்
சிற்றடியை
வந்திக் கிலேனென்றும் வாழ்த்து கிலேன்மயில்
வாகனனைச்
சந்திக் கிலேன் பொய்யை நிந்திக்கி லேனுண்மை
சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும்
போக்குதற்கே.''

என்னும் ஆத்ம சுத்தி பாடலை ஓதிப் பணியவும்.

4. உணவு உட்கொள்ளும் பொழுதும் பருகும் பொழுதும் : கந்தர் அலங்கார பாடலாகிய

''பொருபிடி யுங்களிறும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல் சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை
யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.''

என்பதில் வரும் ''பொரு பிடியுங்களிறும் புனச் சிறுமான் தருபிடி காவல் சண்முகவா'' எனச் சாற்றி, உணவு உட் கொள்ள வேண்டும்.

5. நித்திரை கொள்ளும் பொழுது : திருப் புகழில் முதலடியில் தொடங்கும் பாடலாகிய

தவர்வாட் டோமா சூலத் தரியாக்காதிய சூருந்
தணியாச் சாகா மேழுங் கிரியேழுஞ்-



சருகாக் காய்கதிர் வேலும் பொருகாற் சேவலு நீலந்
தரிகூத் தாடிய மாவுந் தினைக்காவல்;
துவர்வாய்க் கானவர் மானுஞ் சுரநாட் டாளொரு
தேனுந்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே-
துணையாய்க் காவல்செய் வாய்.''

எனப் பாடி துதித்து விட்டு உறங்க வேண்டும்.

**6. நோய் வந்தால் :** திருப்புகழ் பாடலாகிய

''இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி விடமேநீ-
ரிழிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை யிவையோடே;
பெருவயிறீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்-
பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்க ளருள்வாயே;
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக இசைபாடி-
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே;
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா-
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.''

என்னும் பாடலை முப்போதும் சொல்லித் திருநீறு இட்டுக் கொள்ளவும்.

**7. தும்மினும், இருமினும், கொட்டாவி விடினும், ஏப்பம்விடினும் :**

கந்தர் அந்தாதி பாடலாகிய

''சிறுமி குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்தினைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை
வேட்டுவனெனச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே.''

என்பதில் கோடிட்ட வாக்கியமாகிய ''குமர சரணம்'' என கூறுதல் வேண்டும்.

**8. அச்சத்தோடு தனிவழி நடக்கும் பொழுது :**

கந்தர் அலங்கார பாடலாகிய

''விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும்
பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன்
மயூரமுமே.''

என்ற பாடல் முழுவதும் ஓதி அத்துடன் வேல் வகுப்பில் வரும் கீழே கொடுத்துள்ள அடிகளை சொல்லிக் கொண்டே வழி நடக்கவும்.

பாடல் - வேல் வகுப்பில்.

''தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்.

திருத்தணி யி லுதித்தருளு மொருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயி
னடத் துகுகன் வேலே.''

என மனதில் துதித்துக் கொண்டே வழி நடக்கவும்.

**9. மனக்கலக்கம் வரும்போது :** திருப்புகழ் பாடலாகிய

''வேலொத்து வென்றிய'' என துவங்கும் பாடலில் கடைசி அடியாகி

''ஆலித்தெ ழுந்த டர்ந்த ஆலத்தை யுண்ட கண்ட
ராகத்தில் மங்கை பங்கர் நடமாடும் -
ஆதிக்கு மைந்த னென்று நீதிக்குள் நின்ற அன்பர்
ஆபத்தி லஞ்ச லென்ற பெருமாளே.''

என ஓதி அடுத்து திருப்புகழிலிருந்து வரும் பாடலாகிய

''அதிருங் கழல் ப ணிந்து னடியேனுன் -
அபயம் புகுவதென்று நிலைகாண்;
இதயந் தனிலிருந்து க்ருபையாகி-
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே;

என துதித்து, அடுத்து கந்தர் அந்தாதியில்

''சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்த வெந்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளி பொன்
செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ்சேதமின்றே.''

என வரும் பாடலைத் துதிக்கவும்.

**10. பெரிய ஆபத்துக்கள் வரும்போது :** ''பொன்றாமன்றாக்கும் புதல்வரும்'' என துவங்கும் திருப்புகழில் கடைசி அடியாகிய

''அன்பால் நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கந் தரவல பெருமாளே.''

என்பதனை மனதில் தியானித்து கொண்டு அடுத்து

''நாளென் செயும்வினை தானென் செயுமெனை
நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும
ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ்
சண்முகமுந்
தோளுங் கடம்பு னெக்குமுன் னேவந்து
தோன்றிடினே.''

என்னும் கந்தர் அலங்காரப் பாடலை ஓத வேண்டும்.

**11. பயணம் புறப்படும் போது :** மேலே சொன்ன ''நாளென் செயும் வினை தானென் செய்யும்'' என்னும் பாடலையே கோளறு பதிமாக கருதி ஓதிடல் அவசியம்.

**12. நினைத்த காரியம் அநுகூலமாக :** திருப் புகழ் ''விலைக்கு மேனியிலினி'' என்னும் பாட லாகிய ''ஒருவழிப டாது மாயை'' என்பதில் கடைசி அடியாகிய

''முருகபொரு சூரர் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவோனே-
மொழியுமடி யார்கள் கோடி குறைகருதி னாலும்
வேறு
முனியஅறி யாத தேவர் பெருமாளே.''

என்றும்,

''வேண்டியபோது அடியர் வேண்டிய போகமது
வேண்டவெறாதுதவு பெருமாளே.'' என்றும்
''அடியவரிச்சிசையில் எவை எவை உற்றன
அவை தருவித்தருள் பெருமாளே.''

மேலும்

''யார் வேண்டினால் கேட்ட பொருளீயும்
த்யாகாங்க சீலம் போற்றி'' எனவும்

''நினைத்த காரியம் அநுகூலமே புரி பெருமாளே'' எனத் திருப்புகழ் பாடலில் வரும் அடியினைக் கூறி முருகனை வேண்டிக் கொள்ளவும்.

**13. கண் பார்வை மங்காமல் இருக்க :** திருப்புகழ் பாடலில் வரும் ஒரு அடியாகிய

''இடர்கள் படுகுருடனெனை அடிமைகொள
மகிழ்வொடுனது இருநயனக் கருணை சிறிது
அருள்வாயே''

என தினமும் துதித்து வருதல் அவசியம்.

★★★

# வருணனின் கருணையே வருக!
# வான்மழை இங்கே பொழிக!

– டாக்டர் த. அமிர்தலிங்கம்



கருணையங் கடலாம் இராமர்
கடவுக்குத் தெய்வம் ஆகும்
வருணனின் வரவை வேண்டி
வாரமாய் விரதம் நோற்க
பெரியவன் பெருமை எண்ணிப்
பொருக்கென வாரா தேதான்
அருஞ்சினம் இராமர்க் காக்கி
ஆடினான் ஆட்டம் அன்று. 1

கோபமும் இராமர் கொண்டு
கோதண்டம் கையில் தாங்கி
சாபங்கள் எய்து சாட
சஞ்சல முற்று வந்து
பாபங்கள் தீர்த்துக் காக்க
பதமலர் பணிந்து போற்றி
ஆபத்துக் குதவ வந்த
அருங்கதை அன்று கண்டோம். 2

திருமுறை நாளும் ஓதி
திருமழை வேண்டு கின்றோம்
உருகியே பாடி நாளும்
உயர்மழை வேண்டு கின்றோம்
வருணனும் அன்று போல
வேடிக்கை காட்டு கின்றான்
வருவதாய் காட்டி வாரான்
வரட்சியால் வாட்டு கின்றான். 3

அரக்கர்கள் தம்மோ டாற்றும்
அருஞ்சமர் ஏதும் உண்டோ?
பெருங்கடற் கப்பால் மீன்கள்
போரிடும் பூசல் உண்டோ?
வருணனை வேண்டி நாங்கள்
மாதமாய் தவம் புரிந்தும்
கருணையே இன்றி மண்மேல்
கொடுமைகள் புரிவ தேனோ? 4

''நல்லவர் ஒருவர் உண்டேல்
நல்மழை பெய்யும்'' சான்றோர்
சொல்லிய பாவும் பொய்யோ?
தெய்வங்கள் யாவும் பொய்யோ?
அல்லெனக் கறுத்து மேகம்
அமுதமாம் நீரைப் பெய்க!
அல்லல்கள் மாய்ந்து ஞாலம்
ஆனந்தம் கண்டு வாழ்க! 5



★★★






திருவேற்காட்டில் 18-6-03 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1053 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணங்களை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் யாவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451






திருவேற்காட்டில் 18-6-03 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1053 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணங்களை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் யாவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் இத்திருமண விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.